Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 07 ஞாயிற்றுக்கிழமை (20.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 112

Tilko Jaffna City Hotel
TILKO
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
(C/2278)
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969

















## கிளிநொச்சி பிரதம தபாலகம் புனரமைக்கப்பட்டு திறப்பு



(கிளிநொச்சி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் முற்றாக அழிவடைந்த கிளிநொச்சி பிரதான தபாலகம் புனரமைக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் (19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா செல்ல முயன்ற பொன்.காந்தன் கைது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் பிரத்தியேக செயலாளர் பொன்.காந்தன் நேற்றுக் காலை இந்தியாவிற்குச் செல்ல முயற்சித்தவேளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் 'அறிவகம்' எனப் பெயரிடப்பட்டுள்ள சிறிதரன் எம்.பி.யின் அலுவலகத்திலிருந்து அண்மையில் வெடி மருந்து, ஆபாச வீடியோக்கள், புகைப்படங்களுடன் பிரதேச யுவதிகளின் புகைப்படங்கள் பல கைப்பற்றபட்டமை தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்றினால் இவரைக் கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தலைமறைவாகி

இருந்த பொன்.காந்தன் நேற்றுக் காலை இந்தியாவிற்கு புறப்படவிருந்த விமானம் ஒன்றில் தப்பி ஓடுவதற்கு முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் யாழ்பாணத்தில் இரு இளைஞர்கள் சுமார் 11 கிலோ கிராம் வெடி மருந்துடன் கைது செய்யப்பட்டிருந்



தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது ஒரு இளைஞன் சிறிதரனின் செயலாளரும் நெருங்கிய சகாவுமான அருணாச்சலம் (19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் இழுபறி நிலை தொடரக்கூடாது

## என்கிறார் சம்பந்தன்



(திருகோணமலை)

**தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான தற்போதைய இழுபறி நிலை தொடர முடியாது. விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்பது தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

நேற்றுக்காலை திருகோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமகால நிலைவரவம் பற்றி சம்பந்தன் உரையாற்றினார்.

அவ்வுரையில் சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரைப் பலவீனப்படுத்தி தமிழ் இனத்தின் இருப்பை அடையாளத்தை மாற்றி அமைக்கும் முயற்சியில்தான் இலங்கை அரசாங்கம் காலத்தை கழித்து வருகின்றது. மனித உரிமை மீறல் தொடருகின்றது. அனைத்துலக சமூகம் எமது நிலை தொடர்பாக தமது முயற்சிகளைக் கைவிட முடியாது. தொடர்ந்து செயற்பட்டு மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்துலக சமூகம் தீவிரமாக செயற்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பது அரசாங்கத்திற்கு அவசரமாக தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு அவசியமாகின்றது. நாட்டின் இறைமையில் தமிழ் மக்களும் பங்காளிகளாக வேண்டும். தற்போதைய அரசமைப்பு முறைமையின் (19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம்

அமெரிக்க விசேட பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

மூவர் அடங்கிய இந்த விசேட பிரதிநிதிகள் குழுவில் அமெரிக்காவின் பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூர், பாதுகாப்பு பிரதி உதவிச் செயலாளர் விக்ரம் சிங் மற்றும் பிரதி உதவிச் செயலாளர் ஜேன் ஜிம்மர்மன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இக்குழு இலங்கை மற்றும் மாலைதீவுக்கான விஜயத்தினை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் பெப்ரவரி முதலாம் திகதிவரை மேற்கொள்ளவுள்ளதென தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் உயரதிகாரிகள், அரசியல் கட்சிகளின் (19) ஆம் பக்கம் பார்க்க

## வாழ்வின் எழுச்சித் திட்டச் செயலமர்வை கண்டுகொள்ளாத அலுவலர்கள்

(கிளிநொச்சி)

வறுமையை இல்லாதொழிக்கும் வகையில் அரசினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வாழ்வின் எழுச்சித்திட்டம் தொடர்பான அறிவூட்டும் செயலமர்வுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் அதிகாரிகளினால் கிராம அலுவலர், பட்டதாரிப்பயிலுநர்களுக்கு வழங்கப்படுகின்ற போதிலும், அவர்கள் இந்த விடயம் தொடர்பாக அதிக ஆர்வம் காட்டாமல் இருப்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி தொடர்பான அறிவூட்டும் செயலமர்வுகள் கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடத்தப்படுகின்றது. இந்தச் செயலமர்வுகளில் கிராம அலுவலர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் கலந்துகொள்கின்றனர். இந்தத் திட்டத்தில் விவசாயம், கால்நடை, சிறு கைத்தொழில் மற்றும் கடற்றொழில் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவர்கள் மூலமாகவே மக்களுக்கு இந்தத்திட்டம் தொடர் (19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கான பயணத்தில் மாற்றம் எதுவும் இல்லை

### என்கிறார் நவநீதம்பிள்ளை

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் தனது முடிவில் எந்தவித மாற்றமும் இல்லையென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கையின். மனித உரிமைகள் நிலையை மதிப்பீடு செய்வதற்கு, ஜனவரி மாதம் அங்கு செல்லவுள்ளதாக முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவ்நீதம்பிள்ளை தெரிவித்திருந்தார்.

ஜனவரி மாதம் முடிவடைவதற்கு இன்னமும் 12 நாட்களே உள்ள நிலையில், முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று, இலங்கை செல்லும் திட்டம் உள்ளதா என்று இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர் நேற்று முன தினம் நவநீதம்பிள்ளையிடம் (19) ஆம் பக்கம் பார்க்க

## உதவி செய்வதாக நடித்து தாலிக்கொடி திருடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்-வவுனியா பஸ்ஸில் பயணித்த இளம் பெண்ணின் தாலிக்கொடி திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணை யாழ்.பொலிஸார் கைது செய்ததுடன், தாலிக் கொடியையும் மீட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து யாழ். நோக்கித் தனது கைக்குழந்தையுடன் பயணித்த இளம் பெண்ணுக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்து அவரது கைப்பையை (19) ஆம் பக்கம் பார்க்க


# யாழ். வர்த்தகக் கண்காட்சியின் நேற்றைய பதிவுகள் சில...





















## சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சபாரி மோட்டார் சைக்கிள் 15 HP இஞ்சின் மோட்டர், ஹொண்டா மோட்டார் சைக்கிள் CD 125 என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு எம்.இக்பால் 171, அலிபா அப்துல்காதர் வீதி (நாவலர் வீதி), ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் - 0773266450 (C/1780)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- க.சிவரட்ணம் அல்லது சிவராசா, றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/163)


# வாழ்வாதாரத்தை உயர்த்த ஒத்துழைப்பு அவசியமாகும்

### - 512 ஆவது படைப்பிரிவுத் தளபதி -



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு என்ன என்ன வாழ்வாதார உதவி தேவை என்பது இராணுவத்தினருக்குத் தெரியாது. உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பின் மூலமாகவே யுத்தப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கான உதவிகளைப் புரியமுடியும் என்று பிரதேச செயலர்களையும் கிராம அலுவலர்களையும் 512 ஆவது படைப்பிரிவின் தளபதி சந்தன குணதிலக கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று யாழ். சிங்கள மகா வித்தியாலயம் அமைந்திருந்த பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காரியாலயத்தில் நடைபெற்ற பாதுகாப்புப் படைகளின் சமூகநலத் திட்டம் ஆரம்பமாகி 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அந்தத் திட்டங்கள் குறித்து மீளாய்ந்து கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டே அவர் இவ்வாறு பிரதேச செயலர்களையும் கிராம அலுவலர்களையும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வேலணை, ஊர்காவற்றுறை, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்களும் கிராம அலுவலர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் இலங்கை பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் 2010, 2011, 2012, ஆம் ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு மேற்கொண்டிருக்கும் வாழ்வாதார உதவித்திட்டங்கள் குறித்த ஒளிப்படத் தொகுப்பு காண்பிக்கப்பட்டதுடன், அது தெடர்பான விளக்கவுரைகளும் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தில் வீடமைப்பு, டெங்கு ஒழிப்பு, வாழ்வாதார உதவி, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், மருத்துவசேவை, இரத்ததானம் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இராணுவத்தினரால் தென்பகுதியில் உள்ள உதவி நிறுவனங்கள், தனவந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட உதவிகள் மூலமாகவே யாழ். மக்களுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.


அத்துடன் இந்த உதவிகளை யாழில் சில அரசியல்வாதிகளும் சில பத்திரிகைகளும் சந்தேகக் கண்ணுடனேயே நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# யாழ்.வர்த்தகக் கண்காட்சியின் நேற்றைய பதிவுகள் சில...




































படங்கள்: பார்த்தீபன், கார்த்திகேயன்

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஐயாமார் வெளிநாடு போகிறார்கள்!

அடுத்த வாரம் தென்னாபிரிக்கா செல்கிறதாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு! ம்... போய்..ய்..? இலங்கை அரசு ஒன்றுக்கும் சரிவராது என்பதை ஒன்பதாவது முறையாகவும் எடுத்துச் சொல்லப் போகிறார்களாம்! ம்... சொல்லி..ஈ..? என்று என்னத்த கன்னையா போலத்தான் இழுத்து நீட்டிக் கேட்க வேண்டியிருக்கிறது.

அரச வெறுப்பையே முதலீடாக வைத்துப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் ஊடகங்களுக்கு வேண்டுமானால், மார்ச் மாதம் வரைக்கும் பரபரப்புக்கு என்ன செய்வது என்ற அங்கலாய்ப்புக்குப் பயன்படுத்திக் கொள்ள இது ஒரு வாய்ப்பாகலாம்.

"தலைவர்கள் தென்னாபிரிக்கா போகிறார்கள்; சர்வதேசம் உன்னிப்பாகக் கவனிக்கிறது; தமிழ்மக்களுக்கான தீர்வு நெருங்கி வந்துகொண்டிருக்கிறது; இலங்கை அரசாங்கம் பயத்தில் நடுநடுங்கி, தலைவர்களின் இந்த முயற்சிகளைக் குழப்புவதற்கு கடும் பிரயத்தனங்களை எடுத்துக்கொண்டிருக்கிறது; என்ன இருந்தாலும் மார்ச்சில் இலங்கை மாட்டுப்படப் போவது உறுதி..." என்று விதவிதமான தலைப்புச்செய்திகளும், ஆய்வுக்கட்டுரைகளுமாக தமிழ்மக்களின் தலைகளில் மிளகாய் அரைத்துத் தூள் கிளம்பப் போகிறது!

அதற்குமேல் த.தே.கூ. வின் மற்றுமொரு சர்வதேசச் சுற்றுலாவாக இதுவும் சிலபல வீரவசனங்களுடன் இனிது நிறைவேறும். உடனே நாட்டுக்குத் திரும்பாமல், அப்படியே கனடா லண்டனுக்கும் ஒரு 'டூர்' போய்விட்டு வந்தால், அங்குள்ள தமிழர்களுக்கு இவர்களுடன் கூட இருந்து சாப்பிடுவதற்கு ரிக்கெற் போட்டு முடிந்தளவு காசையும் வசூலித்துக்கொண்டு வந்துவிடலாம்.

தீர்வு கிடைத்துவிடக் கூடாதென்பதற்கு தீர்மானகரமாகச் செயற்பட்டுவரும் இவர்களது 'சர்வதேசப் பேய்க்காட்டலை' விளங்கிக்கொண்டு நாம் எப்போது கேள்வி கேட்கப் போகிறோம்? இத்தனை அப்புக்காத்து மூளைகளும் இந்த நீண்ட நெடுங்காலமாக தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கி மெனக்கெட்டு, தீர்வைத் தூரத் தூரவாகத் தள்ளிவிட்டுக்கொண்டே வருவதற்கு இவர்கள் காரணமில்லையா? வேறு யாரோதான் காரணமா?

இலங்கை அரசிடம் பேசிப் புண்ணியமில்லை; சர்வதேசம்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற மாயமானின் பின்னால் இன்னும் எவ்வளவு காலம்தான் மக்கள் சென்றுகொண்டிருப்பது? நாம் முன்னேறி வளர்ந்து விட்ட விவேக மனிதர்கள். இன்று, ஒருவர் இன்னொருவரை அடக்காமல், ஆனால் இருவரும் சேர்ந்து வாழ்வதற்குரிய தீர்வைக் கண்டுகொள்ள எத்தனையோ வழிகள் முறைகள் உள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வையும் அரசியல் உரிமைகளையும் பெற்றுக்கொள்ள, முதல் நிபந்தனையாக நாம் நம்மைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். பகையையும் வெறுப்பையும் வீம்பையும் இணக்கமின்மையையும் வெளிப்படுத்தியபடி இருக்கும் கடந்த கால வழிமுறைகளிலேயே நின்றுகொண்டு, இங்கு எதுவும் சரிவராது என்ற புலம்பலானது கடைந்தெடுத்த ஏமாற்றுவேலையே தவிர வேறில்லை.

இன்றைய சூழ்நிலைக்கு ஏற்பத்தான் நாம் முயற்சிகளைச் செய்ய வேண்டும். இன்று நமது மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. பதுங்கு குழிகளுக்குள் பாயும் உயிர்ப் பய ஓட்டமில்லை. இந்த நிலையில், வாய்வீச்சுப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது, மக்களைத் தொடர்ந்தும் தியாகிகளாக்கிப் பிழைக்கும் ஏமாற்றுத்தான்! அவர்களைத் துயரங்களில் அழுத்திக் கதிரை அரசியல் செய்ய எண்ணும் குரூரம்தான்.

மக்களின் அன்றாடத் துன்பங்கள் தெரியாத, தங்களது வாழ்நிலையிலிருந்து இவர்கள் பேசுகிறார்கள். மக்களை மேலும் மேலும் கஷ்டங்களில் தள்ளுவதை மறைப்பதற்காக போதை வசனங்களை அவர்களுக்குத் தருகிறார்கள். முதலில் மக்கள், இவர்களிடமிருந்து சுதந்திரம் பெறாமல், நமது பிரச்சினைக்கான தீர்வை அடைவதென்பது இப்படியே தள்ளிப் போய்க் கொண்டுதானிருக்கும் என்றுதான் தோன்றுகிறது.

- ஆசிரியர்

# புலம்பெயர் புலி உறுப்பினர்களுடன் இரகசியத் தொடர்புகள் உள்ளனவா?

## மாணவர்கள்மீது புதிய கோணத்தில் விசாரணை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலம் பெயர் தமிழர் அமைப்புக்களுடன் இரகசியத் தொடர்புகள் உள்ளனவா என்ற தோரணையில் அவர்கள் மீது இப்போது விசாரணைகள் தொடர்கின்றன.

தடுப்பு உத்தரவுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பல்கலைகழக மாணவர்கள் தொடர்பாக உயர்கல்வியமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க இவ்வாறு விளக்கமளித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறான விளக்கமளிப்பை வழங்கினார். குறித்த மாணவர்கள் புலம் பெயர்ந்த தமிழர்களுடன் தொடர்பு கொண்டிருந்தமை உறுதியாகும் பட்சத்தில் அவர்கள் புனருத்தாபனத்திற்கு உள்ளாக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் இந்த விசாரணை நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கற்றல் நடவடிக்கைகளுக்கு எந்த வித பாதிப்புக்களும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன. புலம் பெயர் விடுதலைப்புலிகளுடன் குறித்த மாணவர்கள் தொடர்பு கொண்டிருப்பார்களாயின் புனருத்தாபனத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். இல்லையெனில் விடுதலை செய்யப்படுவார்கள் என உயர்கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# மேர்வினுக்கு அரசியல் பின்னடைவு காளிதேவியின் சாபமே காரணம்

### — கூறுகிறார் முன்னேஸ்வரம் பூசகர்

(கொழும்பு)

வேள்வி பூசையைத் தடுத்து நிறுத்திய அனைவரும் காளிதேவியின் சாபத்துக்குள்ளாகியுள்ளனர். ஆலய வளாகத்தில் அடாவடியில் ஈடுபட்ட அமைச்சர் மேர்வினுக்குத் தாம் வகித்த பதவியை இராஜினாமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆலயக் கதவை இழுத்து மூடிய ஹசித்த மடவல கொல்லப்பட்டுள்ளார். தடையுத்தரவு பிறப்பித்தவர்களும் தற்போது இல்லை. இவ்வாறு முன்னேஸ்வரம் காளிகோயிலின் பூசகர் மகேந்திரன் குருக்கள் தெரிவித்தார். வேள்வி பூசையை அமைச்சர் மேர்வின் தடுத்து நிறுத்தியுள்ள விவகாரம் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னேஸ்வரம் காளி கோயிலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருந்த வேள்வி பூசையை மேர்வின் தலைமையிலான குழு, நேரடியாகவே அங்கு விரைந்து சென்று தடுத்து நிறுத்தியது. அதேவேளை, அந்தக் காலப் பகுதியில் புத்தரின் புனித தந்ததாது இந்தியாவிலிருந்து வழிபாடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்ததால் வேள்வி பூசையைத் தடுத்து நிறுத்துமாறு பல தரப்பும் அழுத்தங்களைப் பிரயோகித்தன. நீதிமன்றமும் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், திட்டமிட்டவாறு பூசை நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் உறுதியாகக் கூறினர். பின்னர் ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய வேள்விப் பூசை கைவிடப்பட்டது. பிறிதொரு திகதியில் பூசை நிச்சயம் நடத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இதற்கிடையில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கோட்டை எனக் கருதப்படும் களனி பிரதேசத்தில் அவருக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆளுந்தரப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர்.

இவ்வாறு அரசியல் களத்தில் என்றுமில்லாதவாறு மேர்வினுக்குப் பின்னடைவு ஏற்படுவதற்கு காரணம் காளிதேவியின் சாபம் என்றே பரவலாகப் பேசப்பட்டது. தற்போது அமைச்சர் மேர்வினுக்கு அரசியல் களத்தில் மீண்டும் சோதனை ஏற்பட்டுள்ளது. அவரின் பிரத்தியேக செயலாளர்கள் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், களனி பிரதேச அமைப்பாளர் பதவியையும் மேர்வின் இராஜினாமா செய்துள்ளார். அமைச்சர் மேர்வினுக்கு இவ்வாறு பிரச்சினைகள் ஏற்பட காளிதேவியின் சாபமே காரணம் எனப் பேசப்படுகிறது.

அமைச்சர் மேர்வின் சில்வா காளிகோயிலுக்கு வந்து பரிகார பூசை செய்யவுள்ளார் என அறியமுடிகின்றது. கோயிலுக்கு யார் வேண்டுமானலும் வந்து பூசை செய்யலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை என்றார் அவர்.

# யாழ்.தகவல் திணைக்களம் மீண்டும் உயிர்பெறுகிறது

### — ஊடக அதிகாரி நியமனம்

(கொழும்பு)

யாழ். மாவட்ட செயலகத்தின் தகவல் திணைக்களத்துக்கு பொறுப்பதிகாரியாகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 2004ஆம் ஆண்டு ஊடகத்துறை அமைச்சினால் தகவல் திணைக்கள அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இருப்பினும் அந்த அலுவலகத்துக்குப் பொறுப்பாக யாரும் நியமிக்கப்படவில்லை.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்காகத் தகவல் திணைக்களத்துக்கு தற்காலிகமாக இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். முஸ்லிம், சிங்கள அதிகாரிகளே இவ்வாறு நியமிக்கப்பட்டனர். அவர்கள் தேர்தல் முடிந்ததும் கொழும்பு திரும்பிவிட்டனர்.

இதன் பின்னர் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படாத நிலையில், தகவல் திணைக்கள செயற்பாடுகளும் முடங்கியிருந்தன. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சிங்கள மொழி பேசும் உத்தியோகத்தர் ஒருவர் தகவல் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## இராமநாதபுரத்தில் இன்று நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இன்று நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

அடையாள அட்டைகளை புதுப்பித்தல், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், பிறப்பு, இறப்பு விவாகப்பதிவுச் சான்றிதழ் என்பவற்றிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என கரைச்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## இந்தியப் பெண் வியாபாரி களுவாஞ்சிக்குடியில் கைது

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடி பகுதியில் சுற்றுலா விசாவில் நாட்டிற்கு வருகை தந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஆடை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவேளையில் பொலிஸ் அதிரடிப் படையினரினால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் இந்தியப் பிரஜை என்பதுடன் இவர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

**மேட்டுக்குடித் தமிழ் மக்களுக்கும் அடிமட்டத் தமிழ் மக்களுக்கும் இனப்பிரச்சினை பொதுவானதாக உள்ளபோதிலும் சமூக, பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஆழமான வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு பற்றிய விளக்கத்தின் அடிப்படையிலேயே வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைப் பார்க்க வேண்டும். மாகாண சபை செயற்பாட்டுக்கு வந்து போதுமான நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளும் காலம் வரை மேட்டுக்குடித் தமிழ் மக்களால் பொறுத்திருக்க முடியும். ஏனென்றால் இனப்பிரச்சினையைத் தவிர அவர்களுக்கு வேறு பிரச்சினை இல்லை. அடிமட்டத் தமிழ் மக்களுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களால் காத்திருக்க முடியாது.**




# அடிமட்டத் தமிழ்மக்களின் உயர்வுக்கு வாழ்வின் எழுச்சி

■ சங்கர சிவன்

வாழ்வின் எழுச்சி (திவி நெகும) சட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. மாகாண சபைக்குரிய விடயங்கள் பறிபோகின்றன என்று ஒப்பாரி வைக்கின்றார்கள். ஆனால், மாகாண சபையை இவர்கள் ஒருபோதும் ஏற்கவில்லை. அது அதிகாரம் இல்லாத வெறும் எலும்புக்கூடு என்றும், சட்டவலு இல்லாதது என்றும், அதனால் தமிழ் மக்களுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை என்றும் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்கள். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட போதுகூடத் தமிழ் மக்கள் தங்களுடன் இருப்பதாகச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டப் போட்டியிடுவதாகக் கூறினார்களேயொழிய மாகாண சபை மூலம் மக்களுக்கு நன்ம்மயான காரியங்களைச் செய்யப்போவதாகச் சொல்லவில்லை. இவர்களது கணிப்பீட்டில் தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லாத மாகாண சபையின் விடயங்கள் போகின்றனவே என்று ஏன் இவர்கள் கவலைப்பட வேண்டும்?

இன்று மாகாண சபையின் விடயங்கள் பற்றிப் பேசும் கூட்டமைப்புத் தலைவர்கள் மாகாண சபையை எந்தளவுக்குச் சீரழித்தார்கள் என்பது பற்றித் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாண சபை செயலிழந்து போனதற்கும் இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனியான மாகாண சபைகள் என்ற நிலை உருவாகியதற்கும் இத்தலைவர்களே காரணம். புலிகளின் ஆணையை ஏற்று வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு எதிரான நிலைப்பாட்டை இவர்கள் எடுத்ததாலேயே இந்த நிலை உருவாகியது. பத்து வருடங்களாகப் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டதன் மூலம் சாதாரண சிங்கள மக்களிடம் மாகாண சபை பற்றிய சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். மாகாண சபை தனிநாட்டுக்கு வழிவகுத்துவிடுமா என்ற சந்தேகம் சாதாரண சிங்கள மக்களிடம் தோன்றியதற்கு இத்தலைவர்களின் பத்து வருட தனிநாட்டுச் செயற்பாடே காரணம்.

ஒருபுறத்தில் மாகாண சபையை நிராகரித்துக் கொண்டு மறுபுறத்தில் வாழ்வின் எழுச்சிச் சட்டம் மாகாண சபையின் விடயங்களைப் பறிக்கின்றது என்று கூக்குரல் போடுகின்ற முரண்பாட்டுக்குக் காரணம் இல்லாமலில்லை. கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியல் தங்கள் பதவிகளையும் செல்வாக்கையும் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டதேயொழியத் தமிழ் மக்களின் நலனையோ மேம்பாட்டையோ இலக்காகக் கொண்டதல்ல. தங்கள் இலக்கை அடைவதற்கு அரசியல் எதிரிகளை எந்தத் தடியாலும் அடிக்க இவர்கள் தயாராக இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் மேம்பாட்டைப் பாதிக்கும் தடியாக இருந்தாலும் இவர்களுக்குப் பரவாயில்லை. அதனாலேயே தங்கள் அரசியல் எதிராளிகள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அடிமட்டத் தமிழ் மக்களின் வாழ்வில் மேம்பாட்டைக் கொண்டுவரக் கூடிய வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

மாகாண சபை மீது கொண்ட பற்றுதலாலோ அபிமானத்தாலோ கூட்டமைப்புத் தலைவர்கள் பேசவில்லை. அரசியல் களத்தில் தங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் கட்சிகள் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தை ஆதரிப்பதாலேயே இவர்கள் கண்டனக் கணைகளைத் தொடுக்கின்றார்கள். வாழ்வின் எழுச்சிச் சட்டத்துக்கு ஆதரவளிக்கின்ற எல்லோரும் துரோகிகள் என்று கூறுவதன் மூலம் அவர்களுக்கு எதிரான உணர்வலையைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். தமிழ் அரசியலில் துரோகிப் பட்டம் மிகவும் மலிவானது. கண்ணை மூடிக்கொண்டு துரோகிப் பட்டம் சூட்டுவது தமிழ்த் தலைவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. இன்று மற்றவர்களைத் துரோகிகள் என்று கூறுபவர்களும் ஒரு காலத்தில் துரோகிப் பட்டத்தைச் சுமந்தவர்கள்தான். இலங்கையில் இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரனைத் துரோகி என்று புலிகள் அறிவித்திருந்தார்கள். இன்று அவர் மற்றவர்களுக்குத் துரோகிப் பட்டம் சூட்டுகின்றார்.

வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைச் சரியாக விளங்கிக்கொண்டால் உண்மையான துரோகிகள் யார் என்பது புரியும். அடிமட்ட தமிழ் மக்களின் வாழ்க்கையில் மேம்பாட்டைக் கொண்டுவரக் கூடிய ஏற்பாடுகள் இச்சட்டத்தில் இருக்கின்றன. இச்சட்டத்தை எதிர்ப்பவர்கள் தான் துரோகிகள். அடிமட்டத் தமிழ் மக்களின் துரோகிகள்.

எந்த அதிகாரமும் மக்களுக்கு நேரடியாக நன்மை பயக்க வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்காவிட்டால் அந்த அதிகாரம் இருப்பதும் இல்லாதிருப்பதும் ஒன்றுதான். அது போலவே மாகாண சபைக்குரிய விடயங்கள் நேரடியாகப் பிரயோகிக்கப்படாமல் கடதாசியில் இருப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

**ஒருபுறத்தில் மாகாண சபையை நிராகரித்துக் கொண்டு மறுபுறத்தில் வாழ்வின் எழுச்சிச் சட்டம் மாகாண சபையின் விடயங்களைப் பறிக்கின்றது என்று கூக்குரல் போடுகின்ற முரண்பாட்டுக்குக் காரணம் இல்லாமலில்லை. கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியல், தங்கள் பதவிகளையும் செல்வாக்கையும் பாதுகாப்பதை இலக்காகக் கொண்டதேயொழியத் தமிழ் மக்களின் நலனையோ மேம்பாட்டையோ இலக்காகக் கொண்டதல்ல. தங்கள் இலக்கை அடைவதற்கு அரசியல் எதிரிகளை எந்தத் தடியாலும் அடிக்க இவர்கள் தயாராக இருக்கின்றார்கள். தமிழ் மக்களின் மேம்பாட்டைப் பாதிக்கும் தடியாக இருந்தாலும் இவர்களுக்குப் பரவாயில்லை. அதனாலேயே தங்கள் அரசியல் எதிராளிகள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அடிமட்டத் தமிழ் மக்களின் வாழ்வில் மேம்பாட்டைக் கொண்டுவரக் கூடிய வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.**

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடக்கவில்லை. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட எல்லா விடயங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டுமானால், மாகாண சபைகளுக்குப் போதுமான நிதிவசதி இருக்கவேண்டும். எந்த மாகாண சபைக்கும் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, ஒதுக்கப்பட்ட எல்லா விடயங்களையும் ஒரே காலத்தில் நடைமுறைப்படுத்தும் சாத்தியமும் இல்லை. வாழ்வின் எழுச்சித் திணைக்களம் போதுமான நிதிவசதியைக் கொண்டதாக அமையவிருப்பதால் இவ்விடயங்களை அத்திணைக்களம் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும். அதனால், மக்கள் நன்மையடைவர்.

மாகாண சபைக்குரிய விடயங்களை வாழ்வின் எழுச்சிச் சட்டம் பறித்தெடுக்கின்றது எனக் கூறுவது தவறு. அவ்விடயங்கள் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்துக்குரிய விடயப்பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்பதே சரியான விளக்கம். மாகாண சபைப் பட்டியலிலும் ஒத்தியங்கு பட்டியலிலும் ஒரே விடயங்கள் இருக்கின்றன என்பதுதான் உண்மையான நிலை. காலப்போக்கில் மாகாண சபை முறை வளர்ச்சியடையும் போது மாகாண சபையே அவ்விடயங்களைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் பிரதான நோக்கம் வறுமையைப் போக்குவது. தமிழ் மக்கள் மத்தியிலும்வறுமை நிலையில் உள்ளவர்கள் இருக்கின்றனர். இவர்களையே அடிமட்டத் தமிழ் மக்கள் என்கிறோம். மேட்டுக்குடித் தமிழ் மக்களுக்கும் அடிமட்டத் தமிழ் மக்களுக்கும் இனப் பிரச்சினை பொதுவானதாக உள்ளபோதிலும் சமூக, பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஆழமான வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு பற்றிய விளக்கத்தின் அடிப்படையிலேயே வாழ்வின் எழுச்சிச் சட்டத்தைப் பார்க்க வேண்டும். மாகாண சபை செயற்பாட்டுக்கு வந்து போதுமான நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளும் காலம் வரை மேட்டுக்குடித் தமிழ் மக்களால் பொறுத்திருக்க முடியும். ஏனென்றால் இனப்பிரச்சினையைத் தவிர அவர்களுக்கு வேறு பிரச்சினை இல்லை. அடிமட்டத் தமிழ் மக்களுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களால் காத்திருக்க முடியாது. காணி இல்லாத பிரச்சினை, வீடு இல்லாத பிரச்சினை, தொழில் வசதி இல்லாத பிரச்சினை போன்றவற்றுடன் வறுமை வாழ்க்கையே அவர்கள் வாழ்கின்றார்கள். மாகாண சபைக்குரிய விடயங்களின் பாதுகாவலர்களாக இன்று பேசுகின்ற தமிழ் தலைவர்கள் எந்தக் காலத்திலும் இந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தியதில்லை. இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதிலேயே இத்தலைவர்கள் கவனமாக இருந்து வருகின்றார்கள்.

அடிமட்டத் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் வறுமை நிலையிலிருந்து அவர்களைக் கைதூக்கி விடுவதற்குமான ஏற்பாடுகள் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தில் இருக்கின்றன. இம்மக்களின் மேம்பாட்டுக்காக வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறு வகையில் பிரயோகிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் தான் இம்மக்களின் உண்மையான துரோகிகள். அடிமட்ட மக்கள் எப்போதும் ஒடுக்கப்பட்டவர்களாக வறுமை நிலையில் வாழவேண்டும் என்ற மேட்டுக்குடியினரின் விருப்பத்தையே இத்தலைவர்கள் பிரதிபலிக்கின்றார்கள்.

# நீதித்துறைக்கு எதிரான அச்சுறுத்தல்; மனித உரிமைகள் பேரவையில் முறையீடு

## சர்வதேச யூரிகள் சங்கம் முஸ்தீபு

(கொழும்பு)

சர்வதேச யூரிகள் சங்கம் இலங்கையில் நிலவும் நீதித் துறைக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் முறையிடுவதற்கு முடிவுசெய்துள்ளது.

நீதித்துறையினரும் வழக்குரைஞர்களும் மிரட்டப்படுவதால் இவ்வருடம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின் போது இலங்கை எவ்வளவு தூரம் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என இப்போது தெரியவில்லை என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

சர்வதேச யூரிகள் மன்றம், சர்வதேச சட்டவுரைஞர்கள் சங்கம் என்பன எவ்வாறெனினும் இந்தப் பிரச்சினையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரஸ்தாபிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் முதலில் நாடாளுமன்றத்தை விழுங்கியது. இப்பொது நீதித் துறையை விழுங்கிவிட்டது. அடுத்து உள்ளவர்கள் சட்டவுரைஞர்கள். இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் விசனத்துக்குரிய விடயமாக மனித உரிமைகள் பேரவையில் இருக்கப்போகின்றது என கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் ஜப்பான் பயணம் பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி ஏழு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பானுக்கு செல்வார் என அறிவிக்கப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் இந்த விஜயம் திட்டமிடப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த விஜயம் மார்ச் மாதம் வரையில் ஒத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியுடன் அமைச்சர்களும் ஜப்பானுக்கு விஜயம் செய்ய உள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2005ஆம் ஆண்டு முதல் தடவையாக ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு விஜயம் செய்யும் இரண்டாவது சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.

# அறிமுகமாகிறது ஒழுக்கவிதிக்கோவை ஊடகங்களின் கழுத்தை இறுக்கும் முயற்சியா?

(கொழும்பு)

சகல ஊடகங்களுக்குமான ஒழுக்கக் கோவை கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படும் என ஊடக அமைச்சு செயலாளர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார். தற்சமயம் சட்டமூலமாக்கப்பட்டுள்ள ஒழுக்கக் கோவைக் கட்டமைப்பு சகல ஊடகங்களுக்கும் வழங்கப்பட்டு, கிடைக்கும் பதிலுக்கு அமைய சகலரதும் அங்கீகாரத்தின் பின்னர் ஒழுக்கக் கோவைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

தேசிய அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு சகல ஊடகங்களினதும் பங்கேற்பு அவசியம் என அவர் கூறினார். மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் அபிவிருத்திப் பயணத்தை முன்னோக்கியுள்ளது. வளர்ச்சியடைந்த ஊடக முறைமையை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு, ஊடக நிறுவனங்களுக்குக் காணப்படுகிறது.

செய்தி அறிக்கையின் போது, செய்திப் பிரிவுகளுக்குக் காணப்படும் பொறுப்பு, செய்தியின் மூலம் ஏற்படும் சமூகத் தாக்கம் என்பன தொடர்பில் ஊடகங்கள் விளக்கத்துடன் செயலாற்ற வேண்டுமென ஊடக அமைச்சின் செயலாளர் கேட்டுக் கொண்டார்.

# மீன் ஏற்றுமதிக்கு புதிய துறைமுகம் தெற்கில் ஜனாதிபதியால் திறப்பு



(கொழும்பு)

தெற்காசியாவிலேயே மிகப் பெரிய மீன் ஏற்றுமதித் துறைமுகமான திக்கோவிட்ட மீன் ஏற்றுமதித் துறைமுகத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சம்பிர தாயபூர்வமாக திறந்து வைத்தார். நெதர்லாந்து அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் கீழ்- 51 மில்லியன் யூரோ செலவில் இந்த மீன் ஏற்றுமதித்துறை முகம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மோசடிகாரர்களை தராதரம் பாராது தண்டிக்க அரசு ஒரு போதும் பின்னிற்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு அரசியல் அமைப்புக்கு ஏற்ப செயற்படுவதாகவும் சட்டத்திற்கு மதிப்பளிக்கும் அதேவேளை, நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க முடிந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். திக்கோவிட்ட மீன் பிடித்துறைமுகத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

போதைப் பொருள் பாவனை சமூகத்தை சீரழிக்கும் ஆயுதமாக மாறியுள்தென ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். தீவிரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டது போன்று போதைப் பொருள் பாவனையில் இருந்து எதிர்கால சந்ததியை மீட்க அனைவரும் முன்வர வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# அரசியல் அமைப்பை திருத்த வேண்டும் அடம்பிடிக்கின்றன இடதுசாரிகள்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்குவதற்கு அரசியலமைப்பை முழுமையாக மாற்றவேண்டும். என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய இடது முன்னணி, இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பனவே இவ்வாறு தெரிவித்துள்ளன. இது தொடர்பில் ஜனநாயக இடது முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கையில்,

அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற புதிய திருத்தத்தில் நிர்வாகத்துறையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு நாடாளுமன்ற முறைமை பலப்படுத்தப்படவேண்டும்.

சகல இனங்களும் ஆட்சியில் உண்மையாக பங்குப்பற்ற வாய்ப்பு வழங்குவதற்கு அதிகார பகிர்வு அவசியமானது. அதிகாரப் பகிர்வுக்கான அலகாக மாகாணம் இருக்கவேண்டும். சிலர் மாவட்ட மட்ட அதிகாரப் பகிர்வு பற்றி பேசுகின்றனர். மாகாணம் பலவீனமான ஆட்சி அலகாகவே இருக்கவேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்காக ஆளும் தரப்பிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் 31 பேர் எடுக்கும் முயற்சி பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், இது கருத் தாடலுக்கான ஒரு முயற்சி மட்டு மேயாகும். 13ஆவது திருத்தத்திற்கு எதிரான ஒரு இயக்கம் காணப்பட்டது.

ஆயினும் நாம் அதனை பாதுகாப்பதற்கு விரும்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

# அடுத்த பிரதமர் யார்? சமலுக்கு அதிக வாய்ப்பு

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் விருப்பமாக அமைந்துள்ளது என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.எம். ஜயரட்ன அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளதனால், அந்த வெற்றிடத்திற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யாருக்கும் சார்பாக பேசவில்லை எனவும், அடுத்த பிரதமர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் சமல் ராஜபக்ஷவென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருதுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிப் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ மிகவும் பொருத்தமானவர் என தாம் குறிப்பிட்டதாகவும், நிதானமாக கருத்துக்களை வெளியிடுமாறு சிலர் ஆலோசனை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தமது கருத்து நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானது என அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

# களனி கொலை வழக்கு நீடிக்கிறது விளக்கமறியல்

(களனி)

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவலவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மஹர நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டபோது இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி ஹசித மடவல கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து களனி மற்றும் பேலியகொடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கொலைக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்கள் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹசித கொலை சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்தாவது சந்தேகநபர் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்ட போது அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஹசித மடவலவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரை கைது செய்யுமாறு வலியுறுத்தி நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# "ரிசானா நபீக் மாவத்தை" கிழக்கில் உருவாக்க பணிப்பு

## சவுதியின் கொடூரத்தை நினைவூட்ட

(மூதூர்)

சவுதி அரேபியாவில் சிரச்சேதம் செய்து கொலை செய்யப்பட்ட ரிசானா நபீக் குடும்பத்தினருக்கு வீடு அமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் தொடங்கி வைக்கப்பட்ட நிலையில் அதற்கு அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டி 2.5 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கி யுள்ளார்.

ரிசானாவின் சொந்த ஊரான மூதூர் - சாபி பகுதியில் இவ் வீடு அமைக்கப்படுகிறது.

ரிசானாவுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் திருகோணமலை - மட்டக்களப்பு வீதியின் பெரியபாலம் தொடக்கம் மூதூர் சாபி நகர் வரையான 2 கிலோ மீற்றர் தூர வீதியை புனரமைத்து அதற்கு ரிசானா நபீ மாவத்தை என பெயரிடுமாறு ரஞ்சித் சியம் பலாபிட்டிய கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ரிசாணாவை சிரச்சேதம் செய்த சவுதி அரசின் எந்த உதவியும் தமக்கு வேண்டாம் எனவும் சவுதிக்கு மேலும் பணிப்பெண்களை அனுப்ப வேண்டாம் என்றும் ரிசானாவின் தாய் பரினா தெரிவித்துள்ளார்.








வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரி பயிலுநர்கள் வழங்கிய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நாடக ஆற்றுகையும், ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் நிறுவனத்தலைவர் பா.ரகுநாதன் நிற்பதையும் காணலாம். (109)

# இந்திய வீட்டுத்திட்ட பயனாளிகள் நியாயமான முறையில் தெரிவு

## - அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை



யாழ்.மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத்திட்டப் பயனாளிகளை உறுதிப்படுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் இரண்டாம் கட்டத்திற்கு பயனாளிகளை தெரிவு செய்வது தொடர்பாகவும் பயனாளிகள் தெரிவின் போது முன்னெடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிரதேச செயலகங்கள் ஊடாக பட்டதாரி பயிலுநர்கள் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல்தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு தகுதியானவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களை குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களாக உள்வாங்கப்படல் வேண்டுமெனத் தெரிவித்தார்.

அத்துடன், இந்திய வீடமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் பயனாளிகள் உள்வாங்கப்படும் பட்சத்தில் தெரிவுகள் அரசின் கொள்கைக்கு அமைய சரியானதும், நியாயமானதுமான முறையில் அமையப்பெற வேண்டுமென்பதில் பிரதேச செயலர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா ஆகியோருடன் பிரதேச செயலர்களும் கலந்துகொண்டனர்.

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் இப்பிரதேசத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக தொழில் கல்வியில் பெறுமதிமிக்க தேசிய தொழில் தராதராப் பத்திர சான்றிதழ் ஒன்றினை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளது.

எனவே இப்பிரதேசத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர் மற்றும யுவதிகள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஶ்ரீ அறிவித்துள்ளார். (18)

# கோணாவில் - மாயான் குளத்தை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கோணாவில் பகுதியிலுள்ள மாயான் குளம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது காணப்படுவதாகவும் இதனால் மழைகாலங்களில் குளத்து நீர் தேங்கி நிற்காது குடியிருப்புக்களுக்குள் பாய்வதாகவும் இக்கிராம மக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இப்பகுதியில் மக்கள் மீள் குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இக்குளத்தை புனரமைப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் குளம் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

முன்னர் இக்குளத்தை பயன்படுத்தி கோணாவில் பிரதேச விவசாயிகள் விவசாய செய்கையை மேற்கொண்ட நிலையில் தற்போது இக்குளம் கவனிப்பாரற்று காணப்படுவது கவலையளிப்பதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்குளத்தை புனரமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு ஏதுவாக சீரமைத்து தருமாறு விவசாய அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள் உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கின்றனர்.

எனவே இக்குளம் புனரமைக்கப்படுமிடத்து இனிவரும் காலங்களில் இக்கிராம விவசாயிகள் விவசாய செய்கையை மேற்கொள்ள இலகுவாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (கே)

# கலந்துரையாடல்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கான பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி 2013 இற்கான கால அட்டவணை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் போட்டிகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்காத கழகங்கள் போட்டிகளில் இணைக்க முடியாதநிலையேற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# முரசின் இன்றைய பலன்

(20.01.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 07 ஆம் திகதி. நட்சத்திரம் பரணி. பின்னிரவு 3.37 வரை. திதி நவமி முன்னிரவு 11.51 வரை. மரணயோகம். இராகுகாலம் 5.05 - 6.35 வரை. சுபநேரம் 9.35 - 11.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சிலர் பிரச்சினைக்கு வருவர். நிதானமும் பொறுமையும் காக்கும். தொழிலில் சிறு சுணக்கம். சேமிப்பு செலவாகும். வாகன பயணத்தில் கவனம். |
| ரிஷபம் | செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். நலன் விரும்புவோர் ஆதரவு கிடைக்கும். தொழில், சிரமங்கள் இருக்கும். செலவு அதிகரிக்கும். நஷ்டம். |
| மிதுனம் | உங்களை தவறாக விமர்சித்தவர், அன்பு பாராட்டும் நிலை வரும். தொழில் வளர வாய்ப்பு வரும். பணவரவில் முன்னேற்றம். |
| கடகம் | சயல்களில் சிறு குளறுபடி ஏற்படலாம். தற்காப்பு அவசியம். மன அமைதி பேணுக. தொழில் போட்டி இருக்கும். பணவரவு தாமதம். |
| சிம்மம் | அடுத்தவர் நலனுக்கு ஆலோசனை தருவீர்கள். செயல்கள் எளிதாகும். தொழில், புதிய சாதனை. கூடுதல் வருமானம். |
| கன்னி | எதிர்பார்த்தது, நிறைவேற தாமதம். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், மந்தம். சேமிப்பு செலவாகும். போக்குவரத்தில் கவனம். கவலை. |
| துலாம் | திறமையில் புதிய பரிமளிப்பு. உற்சாகம். செயல்கள் எளிதாகும். தொழில், இடையூறு விலகும். லாபம். பழைய விவகாரத்தில் அனுகூலத்தீர்வு. |
| விருச்சிகம் | பய உணர்வு இருக்கும். பிறரிடம் ஆதரவை எதிர்பார்ப்பீர்கள். தொழில், அதிக பணிபுரிய நேரும். செலவுகள் இருக்கும். உறவினர்கள் ஆதரவு நெருக்கம். |
| தனுசு | முன்யோசனையுடன் நடந்து வெற்றி. குடும்ப குழப்பம் சரியாகும். தொழில், அபிவிருத்தி. கூடுதல் லாபம். கணவன் மனைவி அன்யோன்யம். |
| மகரம் | பிறரை மதித்து, சிரமம் தவிர்க்கலாம். முக்கிய செயல் நிறைவேற தாமதம். தொழில், சிக்கல் தோன்றி மறையும். சுமாரான பணவரவு. |
| கும்பம் | ஒருமுக மனதுடன் செயல்படுவீர்கள். அனுகூல காரியங்கள். தொழிலில், எதிர்பாராத உதவி கிடைக்கும். உபரி வருமானம். குடும்பத் தேவை நிறைவேறும். |
| மீனம் | பெற்ற வசதியை பெரிதென எண்ணுவீர்கள். உறவினர் வருகையால் மகிழ்ச்சி. தொழில், இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு. வீட்டுப் பொருள் வாங்கலாம். |

# வென்றது தர்மம்

## ஏமாற்றிவிட்டார்

(மெல்போர்ன்)

ஆர்ம்ஸ்ரோங் விளையாட்டு உலகை ஏமாற்றி விட்டார் என ரென்னிஸ் வீரர் ஜோகோவிச் தெரிவித்துள்ளார். ஆர்ம்ஸ்ரோங் எனது காலத்தில் இருந்த பலருக்குத் துரோகம் செய்துள்ளார். இத்தனை ஆண்டுகள் தவறை நினைத்து, நினைத்து துன்பப்பட்டுள்ளார். இவர் வென்ற அனைத்துப் பட்டங்கள், பதக்கங்களை திருப்பி தந்துவிட வேண்டும். ஏனெனில், தவறு செய்த பின்பும் இவற்றை வைத்திருப்பது ஒரு நல்ல விளையாட்டு வீரனுக்கு அழகல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அமெரிக்காவின் பிரபல சைக்கிள் பந்தய வீரரான லான்ஸ் ஆம்ஸ்ரோங், தான் ஊக்கமருந்து பாவித்துக் கொண்டதை ஒப்புக்கொண்டுள்ளார்.

1999 முதல் 2005ஆம் ஆண்டு வரையில் பிரபல சைக்கிள் பந்தயமான உலக டூர் டி பிரான்ஸ் போட்டியில் பட்டம் வென்று முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தவர் ஆம்ஸ்ட்ரோங். இவர், ஊக்கமருந்து உபயோகித்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அவருடைய பதக்கங்கள் பறிக்கப்பட்டதோடு, சாதனைகளும் அழிக்கப்பட்டன.

நீண்ட நாட்களாக தன் மீதான புகாரை மறுத்து வந்த ஆம்ஸ்ரோங், கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவில் உள்ள ஓ.டபிள்யூ.என். தொலைக் காட்சி நெட்வோர்க் உரிமையாளரான ஓப்ரா வின்பிரேவுக்கு அளித்த பேட்டியில், தனது தவறை ஒப்புக் கொண்டார். டெக்சாஸ் மாகாணம்ஆஸ்டின் நகரில் உள்ள ஆம்ஸ்ரோங்கின் வீட்டில் வைத்து பதிவு செய்யப்பட்ட அவருடைய பேட்டியின் ஒரு பகுதி கடந்த வியாழக்கிழமை இரவு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

கேள்வி–பதில் வடிவில் அமைந்துள்ள அந்தப் பேட்டியில், ஊக்கமருந்து உட்கொண்டதை ஒப்புக்கொண்டுள்ள அவர், ஊக்கமருந்து இல்லாமல் டூர் டி பிரான்ஸ் போட்டியில் வெல்ல முடியும் என்று நினைக்கவில்லை. 2009ஆம் ஆண்டு மீண்டும் போட்டியில் பங்கேற்க வராமல் இருந்திருந்தால், ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியிருக்கமாட்டேன்.

எனது நீண்டகால நம்பிக்கைக்குரிய நண்பரும், என்னுடன் பயிற்சி பெற்று நான் வென்ற 7 போட்டிகளிலும் என்னுடன் போட்டிகளில் கலந்து கொண்டவருமான லெப்டினென்ட் ஜோர்ஜ் ஹின்கேப்பியை ஊக்கமருந்து தடுப்பு அமைப்பிடம் புகார் சொல்லுமாறு நிர்பந்திக்கப்பட்டபோதே என்னுடைய தலைவிதி தீர்மானிக்கப்பட்டுவிட்டது. இந்த விடயத்தில் வேறு யார் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை. சம்பியன்பட்டம் வென்ற 7போட்டிகளின் போதும் ஊக்கமருந்து உட்கொண்டேன். ஊக்கமருந்து தடுப்பு அமைப்பினரிடம் இருந்து தப்பிப்பதற்காக எனது இரத்தத்தையும் மாற்றிக் கொண்டேன். நான் செய்தது மிகப்பெரிய தவறு. மன்னிக்க முடியாததும் கூட. மக்கள் என்னை மன்னிக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்திருக்கிறேன் என்று அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டச் சிக்கல்


ஊக்கமருந்து உட்கொண்டதை ஒப்புக் கொண்டிருப்பதால் இப்போது நிறைய சட்டசிக்கல்களை ஆம்ஸ்ரோங் சந்திக்க வேண்டி உள்ளது.

வெற்றி மற்றும் ஸ்பான்சர்களின் மூலம் ஈட்டிய கோடிக்கணக்கான தொகையை அவர் திரும்ப செலுத்த வேண்டி வரும். குறிப்பாக 2004ஆம் ஆண்டு டூர் டி பிரான்ஸ் பந்தயத்தில் வெற்றி பெற்ற போது அவரை உற்சாகப்படுத்தும் வகையில் அவருக்கு தாங்கள் வழங்கிய 12 மில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.65 கோடி) போனஸ் தொகையைத் திருப்பி தரும்படி டெக்ஸ்சாசை சேர்ந்த எஸ்.சி.ஏ.நிறுவனம் அவரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இல்லாவிட்டால் அவர் மீது வழக்குத் தொடருவோம் என்றும் எச்சரித்து இருக்கிறது. அமெரிக்க ஊக்கமருந்து தடுப்பு கழகம் நடத்தும் விசாரணை முன்பும் முழு விடயங்களையும் ஆம்ஸ்ரோங் தெரிவிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதே போல் சைக்கிள் பந்தயங்களின் போது பயன்படுத்தப்படும் ஊக்க மருந்துகள் பற்றி தனக்கு தெரிந்த உண்மைகளை தங்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று உலக ஊக்கமருந்து தடுப்பு கழகமும் அவரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

## அரையிறுதியில் சாய்னா



மலேசிய ஓப்பன் பட்மிரன் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இந்தியாவின் சாய்னா தகுதிபெற்றுள்ளார்.

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் போட்டி கோலாலம்பூரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், 33ஆம் நிலை வீராங்கனை நொசோமி ஒகுஹறாவை (ஜப்பான்) எதிர்கொண்டார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சாய்னா நேவால் 21–11, 14–21, 2–0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்த போது நொசோமி காயம் காரணமாக விலகினார். இதனால் சாய்னா நேவால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். அரை இறுதியில் சாய்னா நேவால், 6ஆம் நிலை வீராங்கனை சு இங் தாயை (சீன தைபே) சந்திக்கிறார்.

## அவுஸ்ரேலிய ஓப்பன்

## 4ஆவது சுற்றில் முன்னணி வீரர்கள்

(மெல்போர்ன்)



அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்று ஜோகோவிச், ஷரபோவா, இவானோவிச் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் விளையாட, நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) தகுதி பெற்றார். மூன்றாவது சுற்றில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சுடன் நேற்று மோதிய ஷரபோவா 6–1, 6–3 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்றார். மற்றொரு 3ஆவது சுற்றுப் போட்டியில் சேர்பியாவின் அனா இவானோவிச் 7,5, 6,3 என்ற நேர் செட்களில் சக வீராங்கனை ஜெலினா ஜன்கோவிச்சை வீழ்த்தினார்.

முன்னணி வீராங்கனைகள் ரட்வன்ஸ்கா (போலந்து), நா லி (சீனா), ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி), மகரோவா (ரஷ்யா), ஜூலியா கோயர்ஜஸ் (ஜேர்மனி) ஆகியோரும் 4ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது நோவாக் ஜோகோவிச் (சேர்பியா)6–4, 6–3, 7–5 என்ற நேர் செட்களில் ரேடக் ஸ்டெபானக்கை (செக்.) வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார். தென்னாபிரிக்க வீரர் கெவின் அண்டர்சன், ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ வெர்டாஸ்கோ இடையே நடந்த 3ஆவது சுற்று ஆட்டம் கடும் போராட்டமாக அமைந்தது.

மூன்று மணி 46 நிமிடம் நீடித்த இந்த போட்டியில் கெவின் அண்டர்சன் 4,6, 6,3, 4–6, 7–6 (7–4), 6,2 என்ற செட் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். முன்னணி வீரர்கள் தோமஸ் பெர்டிச் (செக்.), ஜன்கோ திப்சாரெவிச் (சேர்பியா), ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா (சுவிஸ்), கெய் நிஷிகோரி (ஜப்பான்) ஆகியோரும் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## சமநிலையில் 5ஆவது சுற்றுஆட்டம்



விஜ் ஆன் ஜீ: டாடா ஸ்டீல் செஸ் தொடரின் ஐந்தாவது சுற்று போட்டியை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமநிலை செய்தார். நெதர்லாந்தில் உள்ள விஜ் ஆன் ஜீ நகரில், 75ஆவது டாடா ஸ்டீல் செஸ் தொடர் நடக்கிறது.

இதன் 'ஏ' பிரிவின் ஐந்தாவது சுற்றில் -இந்தியாவின் ஆனந்த், உலகின் முதல்நிலை வீரரான நோர்வேயின் கார்ல்சனை சந்தித்தார். இதில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய ஆனந்த், 24ஆவது நகர்த்தலின் போது போட்டியை சமநிலை செய்தார். முதல் இடத்தில் ஆனந்த் (3.5 புள்ளி), நோர்வேயின் கார்ல்சன், ரஷ்யாவின் செர்ஜி கர்ஜாகின் ஆகியோர் உள்ளனர்.

## வென்றது மான்செஸ்டர் யுனைடெட்



(மான்செஸ்டர்)

எப்.ஏ. கோப்பை கால்பந்து தொடரின் 3ஆவது சுற்றில், இங்கிலாந்து வீரர் ரூனே கோல் அடித்து கைகொடுக்க, மான்செஸ்டர் யுனைடெட் அணி, வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணியை வீழ்த்தியது. இங்கிலாந்தில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும், புட்போல் அசோசியேஷன் (எப்.ஏ.) சாலஞ்ச் கோப்பை தொடர் நடக்கிறது. மான்செஸ்டர் நகரில் நடந்த மூன்றாவது சுற்றில் மான்செஸ்டர் யுனைடெட், வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணிகள் மோதின.

காயத்தில் இருந்து மீண்டு,நீண்ட இடைவேளைக்கு பின், மான்செஸ்டர் யுனைடெட் அணியில் இடம் பிடித்த இங்கிலாந்து வீரர் ரூனே, 8ஆவது நிமிடத்தில் கோல் அடித்து நம்பிக்கை தந்தார். இதற்கு வெஸ்ட் ஹாம் யுனைடெட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் மான்செஸ்டர் அணி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் போராடிய இரு அணி வீரர்களால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, 4ஆவது சுற்றுக்கு முன்னேறியது. எதிர்வரும் 26ஆம் திகதி நடக்கவுள்ள 4ஆவது சுற்றில் மான்செஸ்டர் அணி, புல்ஹாம் அணியை எதிர்கொள்கிறது.

## சவால் நிறைந்த தொடர்



தென்னாபிரிக்க அணியுடனான தொடர் மிகவும் சவால் நிறைந்தது என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல்ஹக் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி அங்கு வைத்து 3 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும், 2 ருவென்ரி–20 போட்டிகளிலும் பங்குகொள்ளவுள்ளது. முதலாவது டெஸ்ட் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மிஸ்பா உல் ஹக், எனது அணித்தலைமைக் காலத்தில் பாகிஸ்தான் அணி சந்திக்கவுள்ள மிகப்பெரிய சவாலாக இத்தொடர் அமையவுள்ளது. எனினும் தென்னாபிரிக்காவுடனான சவாலை பாகிஸ்தான் அணியால் வெற்றிகொள்ள முடியும்.

தென்னாபிரிக்க அணி வெற்றிகொள்ளும் திறன் பாகிஸ்தானுக்கு உண்டு. ஆனால் "பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

பாகிஸ்தானின் துடுப்பாட்ட வீரர்கள் ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் அந்த ஓட்டத்தை வைத்து எதிரணியைக் கட்டுப்படுத்தும் திறன் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு உண்டு. பாகிஸ்தான் அணியில் 2 அல்லது 3 துடுப்பாட்ட வீரர்கள் கடினமான ஆடுகள நிலைமைகளில் சமாளித்து ஆடும் திறமையைக் கொண்டவர்கள். எனது அணி மீது எனக்கு நம்பிக்கையுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





யாழ். உயரப்புலம் மெதடிஸ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி நிகழ்வை முன்னிட்டு நேற்றுக் காலை ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றுது. இதில் பெண்களுக்கான போட்டியை வடமாகாண ஆளுநரின் ஊடகவியலாளர் நந்தகுமார் (யாழ்ப்பாணம்) ஆரம்பித்து வைப்பதையும், பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக்கொண்ட வீராங்கனைகள், அதிபர் திலீபன், உப அதிபர் சிரோமினி உள்ளிட்டோரைக் காணலாம். (படம் : நந்தகுமார்)

# விளையாட்டுச் செய்திகள்

## கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இன்று ஆரம்பம்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொள்ளும் இப்போட்டித் தொடர் கொக்குவில் இந்து, யாழ். இந்து மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள போட்டியில் ஸ்ரீகாமாட்சி அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணியும், யாழ். இந்துக் கல்லூரியில் இடம்றெும் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணியும் மோதவுள்ளன. (54)

## மாவட்ட கூடைப்பந்து இறுதிக்கு அணிகள் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டிக்கு கே.கே.எஸ்., பமிலியன், சென்றலைட்ஸ் சொக்ஸ் ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் லீக் முறையில் நடத்தப்பட்டு வரும் கூடைப் பந்தாட்டப் போட்டித் தொடர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு பெண்களுக்கான அரையிறுதிப் போட்டிகளும், ஆண்களுக்கான ஒரு அரையிறுதிப் போட்டியும் நடைபெற்றது.

பெண்களுக்கான அரையிறுதிப் போட்டிகளில் பட்டர்பிளை அணியும் கே.கே.எஸ். அணியும் மோதிய போட்டியில் கே.கே.எஸ் அணி 54:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

உடுவில் அணியும் பமிலியன் அணியும் மோதின. இதில் பமிலியன் அணி 42:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஆண் அரையிறுதியில், பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதியது. இப்போட்டியில் 74:63 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி வெற்றிபெற்றது.

மற்றுமொரு ஆண்கள் அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், கோப்பாய் 'ஏ' அணியும் மோதின. இதில் கோப்பாய்'ஏ'அணி 75-70 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## கீர்த்திகன், விந்தாரகன் சிறப்பாட்டம் சென். ஜோன்ஸ் இனிங்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கீர்த்திகன், விந்தாரகன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கெதிரான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.


இதில் கடந்த 15,16ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும், மகாஜனாக் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனா கல்லூரி அணி, சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாரங்கன் 17, திலக்ஷன் 18, பிரசாந் 16, மயூரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் லோகதீஸ்வர் 16 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், விந்தாரகன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கானமிர்தன் 34 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, கீர்த்திகன், விந்தாரகன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 171 பந்துகளை எதிர்கொண்ட கீர்த்திகன் மூன்று சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 84 ஓட்டங்களையும், 104 பந்துகளை எதிர்கொண்ட விந்தாரகன் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களையும், 45 பந்துகளை எதிர்கொண்ட துவாரகசீலன் இரண்டு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 40 ஓட்டங்கைளயும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனந்தன் 76 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், கஜந்தன் 76 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

153 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க ஜனந்தன் போராடினார். ஆனால் அவரால் அது முடியவில்லை. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று, இனிங்ஸ் மற்றும் ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. இதில் ஜனந்தன் 39, சாரங்கன் 21, நிலோஜன் 18, மயூரன் 17, நிசோத் 25 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் விந்தாரகன், கிருத்திகன், கவாஸ்கர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)



பருத்தித்துறை அஞ்சலி அகம் (உடல், உள ஆற்றுகை வள நிலையம்) மாணவர்களினால் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற ஒளிவிழாவின்போது காட்சிப்படுத்தப்பட்ட யோக நிகழ்வைக் காணலாம். யோகக் கலை ஆசிரியர் மா. இரத்தினசோதியின் நெறிப்படுத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு, பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## வென்றன நண்பர்கள், யூனியன்

(பருத்தித்துறை)

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத்தொடரில் லீக் ஆட்டங்களில் அல்வாய் நண்பர்கள், ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அல்வாய் நண்பர்கள் அணியும் கொண்டலாறு கலைவாணி அணியும் மோதின. இதில் அல்வாய் நண்பர்கள் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா அணியும் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முதல் சுற்று ஆட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)



# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் ⑥

– ருவான் எம் ஜயதுங்க –



பெரும்பான்மையான சிறுவர்களிடம், அவர்களின் துயரமான மனநிலை, முன் ஆக்கிரமிப்பு, தற்கொலை எண்ணங்கள் மற்றும் அச்சங்கள் உட்பட உணர்ச்சிகளின் பின் விளைவுகள் பற்றி நேர்காணல் செய்யப்பட்டன. அவர்களில் பெரும்பான்மை யானவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களின் மரணத்தினால் அவர்களின் தொடர்பை இழந்ததுக்கும், மற்றும் தங்களின் செயல்களின் விளைவாக சமூக அந்தஸ்தை இழந்ததுக்காகவும் வருந்தினார்கள். சிலர் தங்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்ததுக்காக வருந்தினார்கள், ஆனால் மற்றவர்கள் தாங்கள் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றுள்ளதாக உணர்ந்தார்கள். சிலர் தங்கள் நண்பர்களை இழந்ததுக்காக வருந்திய அதேவேளை மற்றும் சிலர் புதிய நண்பர்களை பெற்றுள்ளதை உணர்ந்தார்கள். இந்த கற்கை மூலம், இலங்கையிலுள்ள ஒரு தலை முறையைச் சேர்ந்த அனைத்து சிறுவர்களும் போரைத் தவிர வேறு எதனையும் அறியாதவர்களாக வளர்ந்திருப்பதுடன், தங்கள் எதிரிகளை வெறுக்கும் போதனைகளை உட்கொண்டு வளர்ந்திருப்பதாகவும், சிறுவர்போராளிகளாக கட்டாயமாக சேர்க்கப்பட்டவர்கள் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என மேலும் கண்டறியப்பட்டது. சலுகையுள்ள குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகள் கட்டாயமாக படையில் இணைக்கப் பட்டாலும்கூட அவர்களை மோதலில் இருந்து விடுவித்துக் கொள்ள இயலுமாக இருந்தது (டி சில்வா,ஹொப்ஸ் மற்றும் ஹாங்ஸ் - 2001)

புனர்வாழ்வு நிபுணர்களால் கூறப்பட்டதை போல இலங்கையைச் சேர்ந்த அநேக முன்னாள் சிறுவர்போராளிகள் ஒரு பரந்த அளவிலான பேரதிர்ச்சிக்குப் பின்னான நோயின் அறிகுறிகளைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் போர் பற்றிய உள்ளூர ஊடுருவிய நினைவுகள், பழைய காட்சிகளின் நினைவுகள் மற்றும் உணர்வுகளின் தூண்டல்கள், மரத்துப்போன உணர்வுகள் மற்றும் பல்வேறு ஏனைய பதட்டம் தொடர்பான அறிகுறிகள் என்பனவற்றைக் கொண்டுள்ளார்கள். அநேகர் தங்கள் கடந்தகால அனுபவங்கள் தொடர்பான இடங்கள் மற்றும் அது சம்பந்தமான உரையாடல்கள் என்பனவற்றை தவிர்த்து வருகிறார்கள். சில பிள்ளைகள் வெட்கம் அல்லது குற்ற உணர்வு காரணமாக தங்களது சொந்தக் கிராமங்களுக்கு செல்வதற்குகூட தயக்கம் காட்டி வருகிறார்கள்.

திறமையாக அடையாளம் காணப்படும் சமூக நிலை, பௌதீக இடங்கள் அல்லது கடந்த காலங்களில் ஏற்பட்ட அதிர்ச்சிக்கு பின்னான அழுத்த நோய் அறிகுறிகளைத் தூண்டும் செயற்பாடுகள் உட்பட மேலே விளக்கியவற்றை போன்ற செயல்களைத் தவிர்க்கும் முன்னாள் சிறுவர்போராளிகள், எதிர்காலத்திலும் அவைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்கள். வலுவான மறு அனுபவம் ஏற்படுத்தும் பேரதிர்ச்சியை தூண்டுவது அவை நடந்த இடங்களேயாகும். சில முன்னாள் சிறுவர்போராளிகள், தாங்கள் பங்குபற்றிய அல்லது சாட்சியாகவிருந்த மனிதாபிமானமற்ற வன்முறைகள் நடந்த இடத்துக்கு செல்வதை தவிர்த்து வருகிறார்கள். (பூத்பை, குரொபோர்ட், ஹல்பெரின், 2006)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உளவியல் பேராசிரியராக கடமையாற்றிய தயா சோமசுந்தரம், சிறுவர்போராளிகள் பற்றிய விரிவான களநிலை அனுபவங்களை கொண்டிருப்பவர், இலங்கை சிறுவர்போராளிகளிடத்தில் பரந்துபட்ட அளவில் உளவியல் பேரதிர்ச்சி பாதித்திருப்பதை கண்டறிந்தவர் ஆவார். பேராசிரியர் சோமசுந்தரம் 1993இல் வட்டுக்கோட்டையில் உள்ள 12 சிறுவர் கொத்தணி பாடசாலைகளிலும் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் உள்ள வளர்ந்தோர் பாடசாலைகளிலும் தொற்றுநோய் ஆய்வுகளை மேற்கொண்டபோது, அதன் முடிவுகள் தெரிவித்தது, போர்காரணமாக பரந்துள்ள அழுத்தங்கள் மற்றும் யுத்தத்தின் விளைவு இந்த சிறுவர்களின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தி அதன் விளைவாக ஏற்பட்ட கொடூரத் தன்மை இவர்களை சிறுவர் போராளிகளாக மாற்ற சாத்தியமான பங்களிப்பை வழங்கியது என்று.

இறப்பு மற்றும் காயப்படுதலுக்கு அப்பால் அதனால் ஏற்படும் உளவியல் தாக்கங்களை கருத்தில் கொள்ளும்போது, சிறுவர் போராளிகளை நியமிப்பதை காணும் ஒருவருக்கு அது மிகுந்த வெறுப்பை ஏற்படுத்துவதாக இருக்கும். இராணுவத் தலைவர்கள், இளைஞர்களை ஆட்சேர்ப்பதை தாங்கள் ஏன் விரும்புகிறார்கள் என்பதற்கு சொல்லியிருக்கும் விளக்கம், "பெரியவர்களிடமிருந்து பிறக்கும் கட்டளைகளை எதிர்த்து அவர்கள் கேட்பது குறைவாக இருப்பதுடன், அவர்கள் அதிகம் பயமற்றவர்களாக இருப்பதினால் தாங்கள் எதிர்கொள்ளவேண்டிய ஆபத்துக்களை பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. அவர்களின் அளவு மற்றும் சுறுசுறுப்பு என்பன ஆபத்தான பணிகளுக்கு அவர்களை சிறப்பான தேர்வாக மாற்றிவிடுகிறது. (சோமசுந்தரம் 2002)

(தொடரும்)



# அடி நங்காய்!

அரசர் தன் மகளுக்குத் திருமண ஏற்பாடு செய்தார். தான் சொல்லும் விடுகதைக்கு யார் சரியான விடையைச் சொல்கிறாரோ, அவருக்குத் தன் மகளைத் திருமணம் செய்து தருவதாகச் சொன்னார்.

காய்க்காத காய், கறக்காத பால், கொம்பில் கட்டாத தேன், கையால் திரிக்காத திரி - அது என்ன? என்பதே அரசர் போட்ட விடுகதை.

பிறநாட்டு இளவரசர்கள் பலர் வந்து இந்த விடுகதைக்கு விடை சொல்லத் தெரியாமல், தோல்வியுற்று தலை கவிழ்ந்தவாறே சென்றனர்.

ஒரு மாடுமேய்க்கும் இளைஞன் அரசரின் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் ஆசையுடன் அரசரைப் பார்க்க வந்தான்.

அரசரும் விடுகதையைச் சொன்னார். அதற்கு அவன் அரசரின் மகளைப் பார்த்து, "அடி நங்காய், உன் அன்பால், நான் வந்தேன், இது ராத்திரி" என்றான்.

மாடு மேய்க்கும் இளைஞனின் மதி நுட்பத்தைப் பாராட்டிய அரசர் அவனுக்கே தன் மகளை மணம் முடித்து வைத்தார்.

# தெரியுமா?

- யாரும் மதவழிபாடு செய்யக்கூடாது என்ற சட்டம் அல்பேனியா நாட்டில் உள்ளது.
- திருவனந்தபுரம் தாவரவியல் பூங்காவில் யானைத் தாமரை என்று ஓர் இலை உள்ளது. இது இருபது கிலோ எடையுள்ள பொருட்களைத் தாங்கக்கூடியது. இந்த இலையில் குழந்தைகளை வைத்துப் புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர்.
- இங்கிலாந்தை ஆண்ட முதல் மூன்று ஜோர்ஜ் மன்னர்களுக்கும் ஆங்கிலம் சுத்தமாகத் தெரியாது. அவர்கள் ஜேர்மன் மொழிதான் பேசினார்கள்.
- ஐ.நா.சபைக்கு அப்பெயரைச் சூட்டியவர் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.
- உலகில் புத்தருக்குத்தான் அதிக அளவில் சிலைகள் உள்ளன.
- நித்ய கண்டம் பூரண ஆயுசு என்று கூறக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பூரண ஆயசு என்பது 120 ஆண்டுகளைக் குறிக்கும்.
- உலகில் மரங்களே முளைக்காத ஒரே பகுதி அண்டார்டிகா.
- அண்டார்டிகாவில் சூரியன் மறையும்போது சூரிய ஒளி பிரகாசமான பச்சை நிறத்தில் இருக்கும். அங்குள்ள சீதோஷ்ண நிலையே இதற்குக் காரணம்.



- திபெத்தியர் தேநீரில் சீனிக்குப் பதிலாக உப்பும், வெண்ணெயும் சேர்த்து அருந்துவர்.
- பூட்டான் நாட்டில் திரைப்பட அரங்குகளே கிடையாது.
- உலகிலேயே உயரமான மனிதர்கள், புருண்டி மற்றும் ருவாண்டாவில் வாழும் "டுட்சி" இன மக்களே. இவ்வின ஆண்களின் சராசரி உயரம் 183 செ.மீ.

பல்வேறு மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையே, நல்லிணக்கம் ஏற்பட்டு, ஒற்றுமையாக வாழ்வதற்கு முடியாமலிருக்கும் இந்த உலகில், மனிதர்களும், விலங்குகளும், ஒரே ஊரில், நல்லிணக்கத்துடன், ஒற்றுமையாக வாழ்வது, ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்தான்.

தாய்லாந்து நாட்டின், வட கிழக்கு மாகாணத்தில் உள்ள, பான் கோக் சா-ங்கா என்ற கிராமத்தில், கடந்த, 60 ஆண்டுகளாக இப்படி ஒரு அதிசயம் நிகழ்ந்தேறி வருகிறது. அதுவும், விலங்குகள் என்றால், சாதாரண விலங்குகள் அல்ல, கொடிய விஷத் தன்மை உடைய, பாம்புகளுடன், இந்த ஊரில் வசிக்கும் பொதுமக்கள் ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.

பான் கோக் கிராமம், 60 ஆண்டுகளுக்கு முன் எந்த வளமும் இல்லாமல் இருந்தது. இங்கு வசித்த மக்கள், ஒருவேளை சோற்றுக்கே வழி இல்லாமல் வறுமையில் வாடினர். அப்போது, இந்த கிராமத்துக்கு வந்த ஒரு டாக்டர், அங்குள்ள மக்களை திரட்டி, "வீட்டுக்கு வீடு ஏதாவது செல்லப் பிராணிகளை வளருங்கள். அவற்றுக்கு, சில வித்தைகளை கற்றுக் கொடுத்து, மக்கள் அதிகம் கூடும் இடங்களில், அந்த வித்தைகளை அரங்கேற்றுங்கள். கணிசமான வருமானம் கிடைப்பதோடு, நாளடைவில் சுற்றுலாப் பயணிகளும் இந்த கிராமத்துக்கு வரத் தொடங்கி விடுவர்.." என ஐடியா கொடுத்தார்.


டாக்டர் கொடுத்த ஐடியாவை செயல்படுத்தியவர்கள், சொல்லி வைத்தாற்போல், அனைத்து வீடுகளிலுமே பாம்புகளை வளர்க்கத் தொடங்கினர். எதிர்பார்த்தது போலவே பாம்பு வித்தைகளை பார்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகளும், அந்த கிராமத்துக்கு படையெடுத்து வரத் தொடங்கினர். இப்போதும், இந்த பாம்பு வளர்க்கும் நடைமுறை இந்த கிராமத்தில் தொடர்கிறது.

ஒவ்வொரு வீட்டிலும் மனிதர்கள் இருக்கின்றனரோ இல்லையோ... கண்டிப்பாக, ஒரு பாம்பாவது இருக்கும். இங்குள்ள 140இற்கும் மேற்பட்ட வீடுகளில், ஆயிரக்கணக்கான பாம்புகள் வளர்கின்றன. விஷத் தன்மையற்ற விளையாட்டுப் பாம்புகளிலிருந்து கொடிய விஷத் தன்மையுடைய, நாக பாம்புகள் வரை, விதம் விதமான பாம்புகளை வளர்க்கின்றனர்.

இந்தக் கிராமத்தை தற்போது "கோப்ரா வில்லேஜ்"என்று தான் சுற்று வட்டார மக்கள் அழைக்கின்றனர். பெரியவர்கள் முதல், சிறியவர்கள் வரை, பாம்புகளுடன் கொஞ்சி விளையாடுகின்றனர். இந்தப் பாம்புகளை, தங்களின் குடும்பத்தில் உள்ளவர்களைப் போல் கருதி, பாசத்துடன் வளர்க்கின்றனர். ஏதாவது ஒரு பாம்பு இறந்து விட்டால் போதும், ஒட்டு மொத்த கிராமமுமே துக்கத்தில் மூழ்கி விடும்.

இந்த ஊரில் வசிக்கும், 72 வயதான புலாஸ் சாய் என்பவர் கூறியதாவது;

பாம்புகள் எங்களையும் கடிப்பதுண்டு. இதுவரை 21 தடவை பாம்புகள் என்னை கடித்துள்ளன. கை விரல்களில் தான், அதிகம் கடிபட்டிருக்கிறேன். கொடிய விஷத் தன்மையுடைய பாம்புகள் கடித்தால் உடனடியாக, கடிபட்ட விரலை துண்டித்து விடுவேன். இதுவரை, நான்கு விரல்களை வெட்டித் தூக்கி எறிந்திருக்கிறேன். ஆனாலும், பாம்புகள் மீது பயமோ கோபமோ வந்தது இல்லை. அவைகள், எங்கள் குடும்பத்தின் செல்லப் பிள்ளைகள் என்கிறார் புலாஸ் சாய்.



# தாய்லாந்தின் பாம்புக் கிராமம்!

# இதுதான் சினிமா?



தேவர் "தெய்வச்செயல்" படம் மேஜர் சுந்தர்ராஜனை கதாநாயகனாக்கி எடுத்தார். கொஞ்ச நாளில் அதை தூசி தட்டி ஹிந்தியில் அப்போது உச்சத்தில் இருந்த ராஜேஷ் கன்னா கதாநாயகனாக "ஹாத்தி மேரே சாத்தி" யாக்கி படம் அகில இந்தியாவிலும் சூப்பர் ஹிட். அதையே மீண்டும் தமிழில் எம்ஜிஆரை வைத்து "நல்ல நேரம்" வியாபார ரீதியில் நல்ல லாபம். பொதுவாகவே தேவர் பிலிம்ஸ் படங்கள் எல்லாமே ஒரே மாதிரியானவை தான். இதில் மேஜர் - ராஜேஷ் கன்னா - எம்ஜிஆர் மூவருமே எவ்வளவு மாறுபட்டவர்கள். மூவரும் ஒரே கதையின் நாயகர்கள்!

நாகிரெட்டி "எங்க வீட்டுப் பிள்ளை" எம்ஜிஆரை வைத்து தமிழிலும், ராமாராவை வைத்து தெலுங்கிலும் எடுத்தார். ஹிந்தியில் "ராம் அவ்ர் ஷியாம்" என எடுத்தபோது திலிப் குமார் கதாநாயகன். தமிழ் தெலுங்கு போல் ஹிந்தியில் ஹிட் ஆகவில்லை. கொஞ்ச வருடம் கழித்து அந்தப் படத்தின் முக்கிய இரட்டைக் கதாபாத்திரங்களை பெண்ணாக மாற்றி ஹேமமாலினி நடிக்க "சீதா அவ்ர் கீதா" ஹிந்தியில் சூப்பர் ஹிட். அது உடனே தமிழில் வாணி-ராணி என்று திரும்ப எடுக்கப்பட்டது.

"சீதா அவ்ர் கீதா" ஹிட் ஆகியிருந்த நேரம். மற்றொரு ஹிந்திப் படத்தில் ஹேமமாலினி, ஜிதேந்திரா, அமிதாப் பச்சன் நடித்துக்கொண்டிருந்தார்கள். கிளைமாக்ஸ் கடைசி சண்டைக்காக ஹேமமாலினியை மோசமானவர்களிடம் இருந்து காப்பாற்ற அமிதாப்பும் ஜிதேந்திராவும் கடுமையாக ரிகர்சல் பார்த்து விட்டு செட்டுக்கு போனார்கள். அங்கே இவர்களைக் கட்டிப்போட்டார் இயக்குனர். ஹேமமாலினி மோசமானவர்களிடம் "கட்டிப் புரண்டு" கடுமையாக சண்டையிட்டு அமிதாப்பையும் ஜிதேந்திராவையும் காப்பாற்றினார். அதாவது கதை மாற்றப்பட்டுவிட்டது. சீதா அவ்ர் கீதா வில் ஹேமமாலினியின் சண்டை மக்களுக்குப் பிடித்து விட்டது. அதனால் இந்தப் படத்தில் கிளைமாக்ஸ் மாற்றப்பட்டு ஹேமா சண்டை!




# அங்கே போகலாமே!

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கு முன்பு வெண்டல் பிலிப்ஸ் என்ற சீர்திருத்தவாதி ஒருவர் இருந்தார். அவர் நாடெங்கும் சுற்றி கறுப்பினத்தவர்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார். ஓகியோ மாநிலத்தில் பாதிரியார்கள் சிலர் வந்து அவரிடம், "கறுப்பினத்தவர்களின் விடுதலைக்காகப் பாடுபடுவதோடு அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்லும் நீங்கள் கறுப்பினத்தவர்கள் மிகுந்த மாநிலத்தில் போய் சொற்பொழிவு செய்வதுதானே?" என்று கேட்டனர்.

"நீங்கள் நரகத்தில் அவதியுற்ற பாவிகளை எல்லாம் ரட்சிக்க முயற்சி செய்வது உங்கள் வேலை இல்லையா. அப்படியெனில் நீங்கள் ஏன் இங்கே இருந்து காலத்தை வீணடிக்கிறீர்கள். நரகத்துக்குப் போய் உழைக்கலாமே" என்றார் பிலிப்ஸ். பாதிரியார்கள் வாயடைத்துப் போனார்கள்.

# வணக்கம்...! வந்தனம்...!!

எமது பொது நிகழ்வுகளை எடுத்துக் கொண்டால் முதலில் மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, நிகழ்வுகள், நன்றியுரை என்ற ரீதியில் நிகழ்ச்சிகள் அமைதல் சம்பிரதாயம்.

சில பொது நிகழ்வுகள் கலை நிகழ்வுகள் இல்லாமல் எல்லாரும் பேசிப் பேசியே அறுத்துக் கொண்டிருப்பார்கள்


சில பொது நிகழ்வுகளில் கலை நிகழ்வுகளை பின்தள்ளி பேச்சும், பாராட்டும் முன்னிலைக்கு வந்துவிடும். மக்கள் சலித்துப்போய் ஒவ்வொருவராக எழுந்துபோகும் சந்தர்ப்பத்தில் தான் கலை நிகழ்வுகள் வெறும் கதிரைகளுக்கு முன்னால் தொடங்கும்.

தற்போதைய பேச்சுக்களிலும் சுவாரஸ்யமான பேச்சுக்கள் என்பது குறைவு, பழைய காலங்களில் பேச்சுக்களின் நடுவே குட்டிக் கதைகளும் சொல்வார்கள். தற்போதைய காலங்களில் எவ்வித ஆயத்தமும் இல்லாமல் வெறுமனே வந்து பேசிவிட்டு போவார்கள்.

அதனிலும் கொடுமை என்னவென்றால் ஆரம்பத்தில் வணக்கம் சொல்வது பிரதம விருந்தினரில் இருந்து ஆரம்பித்து சிறப்பு விருந்தினர் கௌரவ விருந்தினர் என்று சகலரது பெயர்களைச் சொல்லி தனித்தனி வணக்கம் போடுவார்கள். சிறப்பு விருந்தினர் நால்வரும் கௌரவ ஏனைய இதர விருந்தினர்கள் நால்வரும் இருப்பின் உத்தரவாதமாக நான்கு நிமிடங்கள் வணக்கம் சொல்வதற்கு வேண்டும். அதிலும் தலைமையுரை வரவேற்புரையோடு சேர்ந்து ஒரு 15பேர் பேசினார்கள் என்றால் சுமார் ஒரு மணித்தியாலம் (15x4=60) வணக்கம் சொல்வதற்கே செலவாகி விடும்.

மகா கொடுமை என்னவென்றால் வரவேற்புரைக்கு அனைவரையும் தனித்தனியாக வணக்கம் சொல்லி பின்பு அவர்களையே தனித்தனியாக வரவேற்பார்கள். சில கூட்டங்களில் நன்றியுரையும் வரவேற்புரையுடனேயே செய்துவிடுவார்கள் (நன்றியுரை பெரும்பாலும் கதிரைகளுக்கு தான் சொல்லப்படுவது) இவ்வாறான நிலைமைகளில் நீதிமன்றில் மூன்று தரம் அழைக்கப்படுவது போல விருந்தினர்களும் மூன்று தரம் பெயர் குறிப்பிடப்படுவார்கள்.

நேரப்பற்றாக்குறையான இந்தக் கால கட்டத்தில் நேரமுகாமைத்துவம் செய்து இந்த பகட்டான; நீளமான; புகழ்ச்சியான வணக்கங்களை குறைத்து "அனைவருக்கும் வணக்கம் இனிய காலை வணக்கம்" என்று சுருக்கமாக சொல்வது அன்றேல் "வணக்கம்.." என்ற ஒரே சொல்லுடன் பேச்சை ஆரம்பிப்பது முன்னால் இருப்பவர்களின் நேரத்தை எவ்வளவோ மீதப்படுத்தும். ஆங்கிலேயர்கள் வெறுமனே 'Ladies and Gentlemen' என்று ஆரம்பிப்தை நாம் கவனிக்க வேண்டும். பல விடயங்களை அவர்கள் போல் பின்பற்றுகிறோம். இப்படியான விடயங்களில் கோட்டை விடுகின்றோம்.





அதனிலும் தற்போது மாலை வணக்கம் காலை வண்க்கம் என்பதற்கு பதிலாக இந்நேர வணக்கம்...' என்று சொல்கிறார்கள் இது பார்த்திபன் வடிவேல் நகைச்சுவையை நினைவூட்டுகிறது. வணக்கத்தை இந்த நேரம் தானே சொல்கிறார்.. பிறகேன் "இந்நேர வணக்கம்" அல்லாவிட்டால் நாளைய வணக்கம்.. நேற்றைய வணக்கம் என்றெல்லாம் சொல்வார்களா? அல்லது இது காலையா மாலையா, மதியமா என்பதில் அவர்களுக்கே குழப்பமோ? ஏன் இந்த இந்நேரம்..?

வணக்கத்தை எப்படியெல்லாம் நீட்டலாம் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் இது. அகர வரிசையிலமைந்த வணக்கம்...!!




அன்பும், ஆதரவும்,
இன்சொல்லும், ஈகையும்...
உண்மையும், ஊக்கமும்...
என்றும் ஏற்றமும்...
ஐயம் ஒறுத்தலும்,
ஓவிய தோற்றமும்
ஔடதம் போல் பண்பும்
எஃ்கு போல் உறுதியும்... கொண்ட
எக்ஸ்(x) அவர்களே...!!



# கண்ணுக்கேற்ற வண்ணம்

வேர்ட் தொகுப்பில் நெடுநேரம் பணி புரிவோர் பலர் தங்கள் கண் பார்க்கும் சக்தியில் மாற்றம் இருப்பதாகச் சொல்லக் கேட்டிருக்கலாம். இதற்குக் காரணம் பெரும்பான்மையானவர்கள் வெள்ளைப் பின்னணியில் கறுப்பு வண்ணத்தில் எழுத்துக்களைப் பார்ப்பதுதான் என்று பலர் கருத்து தெரிவிக்கின்றனர். இதற்கு மைக்ரோசொப்ட் மாற்று வழி ஒன்று வைத்துள்ளது. பின்னணி மற்றும் எழுத்துக்களின் நிறத்தை மாற்றி வைத்தும் இயக்கும் வகையில் இவ்வழி உள்ளது. முதலில் Start, All Programs, Microsoft Word வழியாக சென்று வேர்ட் பைல் ஒன்றைத் திறக்கவும். பின்னர் Tools என்பதில் கிளிக் செய்யவும். கீழாக விரியும் மெனுவில் Options என்னும் பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். பின் விரியும் டயலொக் பொக்ஸில் General என்பதைத் தட்டி புதிய விண்டோ பெறவும். அதில் "Blue background, white text" என்பதன் முன் உள்ள கட்டத்தில் டிக் அடையாளத்தினை ஏற்படுத்தி, ஓகே கிளிக் செய்து வெளியேறவும். இனி வேர்ட் டொகுமென்ட் திறந்தால் அது நீலக் கலரில் வெள்ளை வண்ணத்தினாலான எழுத்துக்களைக் காட்டும்.

# டெக்ஸ்ட் வரிகளில் எண்களைச் சேர்க்க...



டொகுமெண்ட் ஒன்றில் குறிப்பிட்ட வரி ஒன்றில் உள்ள சொல்லைக் குறிப்பிட பரா 1இல் 24 ஆவது வரியில் நான்காவது வார்த்தை என்றெல்லாம் சொல்ல வேண்டியதிருக்கும். இதற்குப் பதிலாக ஒவ்வொரு வரிக்கும் ஒரு எண்ணைக் கொடுத்துவிட்டால் அந்த எண்ணைக் குறித்து எளிதாகச் சொல்லிவிடலாம் அல்லவா? சரி எப்படி டெக்ஸ்ட்டில் எண்களை அமைப்பது? ஆவணத்தைத் தயாரிக்கும் போதே எண்களை வரிக்கு முன் அமைக்க முடியாது. ஒவ்வொரு வரிக்கு முன் எண்ணை அமைத்தால் ஏதாவது சொல்லைத் திருத்துகையில் எண்முன் பின்னே செல்ல வாய்ப்பு ஏற்படலாம். இதற்குப் பதிலாக வேர்ட் தொகுப்பில் தானாக வரிகளில் எண்களை அமைக்கவும். தேவையற்ற இடங்களில் நீக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. எண்களை அமைக்க கீழ்கண்டவாறு செய்யவும்.

File மெனுவினைக் கிளிக் செய்திடுங்கள். பின் அதிலிருந்து "Page Setup" தேர்ந்தெடுக்கவும். பின் விரியும் டயலொக் பொக்ஸில் "Layout" என்பதைக் கிளிக் செய்திடவும். பின் ""Line numbers" என்னும் பட்டனைக் கிளிக் செய்து, இதில் தந்துள்ள விருப்பங்களில் (restart numbering after each page, start at a particular number, etc.) உங்கள் திட்டத்திற்கேற்ற வகையில் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்து டயலொக் பொக்ஸை மூடவும்.

வரிகளில் எண்கள் இருக்கும். ஆனால் நீங்கள் ஆவணத்தை எடிட் செய்கையில் சாதாரணமாக இந்த எண்கள் தெரியாது. ஆனால் அவை அங்குதான் இருக்கின்றன. எண்களைப் பார்க்க வேண்டுமென்றால் பிரிவியூவைக் காணவும். எடிட்டிங் போது எண்களைப் பார்க்க வேண்டும் என்றால் "View" மெனுவினைக் கிளிக் செய்து "Page Layout" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது வரிகளில் எண்களையும் காணலாம். ஆவணத்தையும் எடிட் செய்திடலாம். சரி இந்த எண்களை நீக்க விரும்பினால் - எண்களை நீக்க வேண்டிய டெக்ஸ்ட்டை முதலில் தேர்ந்தெடுக்கவும். டெக்ஸ்ட்டில் ரைட் கிளிக் செய்து அதில் வரும் மெனுவில் "Paragraph" என்பதனைத் தேர்ந்து எடுக்கவும். வரும் டயலொக் பொக்ஸில் "Line and Page Breaks" என்ற டேபைத் தேர்ந்தெடுத்து, அதில் "Suppress Line Numbers" என்ற கட்டத்தில் உள்ள டிக் அடையாளத்தை நீக்க வேண்டும். அதன்பின் ஓகே கிளிக் செய்திடவும்.



## கணினி உலா


AJ.Nimalrajan




# எக்ஸெல்லில் இருந்து வேர்ட்டுக்கு



எக்ஸெல் தொகுப்பிலிருந்து டெக்ஸ்ட்டை கொப்பி செய்திடுகையில், வழக்கமான கொப்பி அண்ட் பேஸ்ட் பயனளிக்காது. எக்ஸெல் டெக்ஸ்ட்டினை, அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும் கொப்பி செய்து கொள்ளுங்கள். பின் வேர்ட் பைலைத் திறந்திடுங்கள். எங்கு பேஸ்ட் செய்திட வேண்டுமோ அங்கு கேர்சரைக் கொண்டு செல்லுங்கள். அதன் பின் வழக்கம்போல் பேஸ்ட் செய்திடாமல் எடிட் மெனு செல்லுங்கள். விரியும் மெனுவில் Paste Special என்று ஒரு பிரிவு இருக்கும். இதனைக் கிளிக் செய்தால் பேஸ்ட் ஸ்பெஷல் டயலொக் பொக்ஸ் கிடைக்கும். இதில் Microsoft Excel Worksheet Object என்பதனைத் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்தால் டெக்ஸ்ட் அநாவசியச் சிக்கல் இன்றி ஒட்டப்படும். ஒட்டப்பட்ட டெக்ஸ்ட் பொக்ஸில் அதனை ரீசைஸ் செய்வதற்கான ஹாண்டில்களும் காணப்படும். இதனைப் பயன்படுத்தி டெக்ஸ்ட்டை உங்களுக்குத் தேவையான வகையில் மாற்றி அமைத்து ஒட்டி வைக்கலாம்.



# மொத்தமாக பெயர் மாற்ற...



பைல் ஒன்றுக்கு புதுப்பெயர் தர விருப்பம் என்றால் உடனே பைல் பெயரில் ரைட் கிளிக் செய்து மெனுவில் Rename தேர்ந்தெடுத்து புதிய பெயர் கொடுத்து அமைத்து விடுவோம்.

இதையே, அந்த பைலைத் தேர்ந தெடுத்து, பின் F2 அழுத்தி, பெயர் உள்ள விண்டோ, மறு பெயருக்கு தயாரானவுடன் புதிய பெயரை டைப செய்து அமைக்கலாம். ஆனால் பல பைல்களுக்கு மொத்தமாக பெயர் மாற்ற என்ன செய்யலாம்?

அதேபோல் சில டிரக்டரிகளில் பரவிக் கிடக்கும் பைல்களுக்கு பெயர் மாற்ற என்ன செய்திடலாம்? இதற்கான வழிகளைத் தருகிறது Advanced Renamer என்ற இலவச புரோகிராம். இதை டவுண்லோட் செய்திட நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி http://aren. hulubulu.net/ இந்த புரோகிராம் எட்டுவகையான வழிகளில் பைல்களுக்கு புதுப் பெயர் அளிக்கிறது. ஏற்கனவே பைல்களுக்கு உள்ள பெயர்களின் அடிப்படையில், பெயர்களில் சில சொற்களைச் சேர்க்கலாம். சில வற்றை எடுக்கலாம் சின்ன, பெரிய எழுத்துக்களை மாற்றலாம் அல்லது முற்றிலும் புதிய பெயரைத் தரலாம்.

டிஜிட்டல் படங்களை கையாள்பவர்களுக்கு இந்தப் புரோகிராம் மிகவும் உதவி செய்கிறது. குறிப்பிட்ட நிகழ்வு அல்லது வகை பட பைல்களை ஒரு தலைப்பில் கொண்டுவந்து, அவை ஒவ்வொன்றுக்கும் வித்தியாசம் காணும் வகையில் பெயர்களை இது தருகிறது.

ஒரு நிகழ்வில் எடுக்கும் அனைத்து போட்டோக்களையும் அவற்றை அடையாளம் காணும் வகையில் இது பெயர்களைச் சூட்டுகிறது. பைல்களின் பண்புகளையும் இதில் மாற்றலாம்.


எப்போது ஒரு பைலை பார்த்தோம் எடிட் செய்தோம் உருவாக்கினோம் என்பதற்கான அட்ரிபியூட்களையும் இதில் மாற்றலாம். ஆங்கிலம் மட்டுமின்றி மேலும் பல ஐரோப்பிய மொழிகளிலும் பெயர் மாற்றத்தை மேற்கொள்ளலாம்.

இந்தத் தொகுப்பின் போர்ட்டபிள் பதிப்பு ஒன்றும் இதன் தளத்தில் தரப்படுகிறது. இதனை எந்த பிளாஷ் டிரைவிலும் எடுத்துச் சென்றும் பயன்படுத்தலாம்.

# யாழில் பொலிஸார் அதிரடி; குற்றவாளிகள் 90 பேர் கைது

கடந்த ஒருவார காலத்தில் யாழ். குடாநாட்டில் விசேட அதிரடி நடவடிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளின் நிமித்தம் 90 இற்கும் அதிகமான குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின்போது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு சட்டவிரோத மணல் கொண்டுசென்ற குற்றத்தில் 2 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்தில் 5 நபர்களும், டெங்கு ஊக்கப்படுத்துவோர் என்ற அடிப்படையில் 15 பேரும், பொது இடங்களில் மது அருந்தி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றத்தில் 23 நபர்களும், மக்களுக்கு தொந்தரவு கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 14 நபர்களும், சட்டவிரோத மிருக வதையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் 2 பேரும் கைது செய்யப்பட்டதோடு சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபட்ட 18நபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதாக யாழ் பிரதிப் பொலிஸமா அதிபர் மேலும் தெரிவித்தார். (இ)




2013 ஆம் ஆண்டுக்கான தரம் 1 இற்காக பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் பாடசாலையின் அதிபர் திருமதி சோ. கிருபானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா (போல்) உரையாற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கௌரவிக்கப்பட்ட தரம் 1 மாணவர்களையும் காணலாம்.

# இந்திய அரசின் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்

இந்திய அரசாங்கத்தால் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான விபரங்கள் வருமாறு:

மாணவர்கள் ICCR புலமைப்பரிசில்களுக்கும் ஏனைய புலமைப்பரிசில்களுக்குமான விண்ணப்பப்பத்திரங்களை உயர் கல்வி அமைச்சின் www.mohe.gov.lk இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்.

விண்ணப்ப பத்திரத்தையும் தராதர பத்திரங்களையும் (ஒரு பிரதி செயலாளர், உயர்கல்வி அமைச்சு (இலங்கை அரசாங்கம்) 18, வார்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்ப வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் தங்களின் விண்ணப்பத்தின் பிரதியை தகவலுக்காகவும் மேல் நடவடிக்கைக்காகவும் கல்விப் பிரிவு, இந்திய துணைத்தூதரகம், 14, மருதடி லேன், நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

விண்ணப்பப்பத்திரம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் புலமைப்பரிசிலின் பெயர் குறிப்பிடவேண்டும். உதாரணமாக "நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் 2013/ 2014"

ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

திரும்பப் பெறமுடியாத கட்டணமாக ரூபா 50 பெறுமதியான முத்திரையை விண்ணப்பப் பத்திரத்தில் இதற்கான பெட்டிக்குள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியால் கையொப்பமிட்டு பெறுமதியற்றதாக்கல் வேண்டும்.

மேலும்இளமாணிப் பட்டப்படிப்பிற்கான பொதுத தகைமைகளாக க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருப்பதுடன் முக்கிய பாடங்களில் தரம் Bயும் அதற்கு மேலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் எடுக்கப்படும். தரம் C நிராகரிக்கப்படும்.

க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் ஆகக் குறைந்தது. மிகத் திறமை சித்தி (B) யுடன் விண்ணப்பதாரி முழு நேரமாக எந்த ஒரு பல்கலைக்கழகத்திலோ அல்லது உயர் கல்வி நிலையத்திலோ இளமாணிப்பட்டப் படிப்பு மாணவனாக கல்வியைத் தொடர்பவரா கவோ அல்லது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மாணவனாகவோ இருத்தல் ஆகாது. அத்துடன் 10.02.2013 இல் 22 வயதிற்கு குறைந்தவராக இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

புலமைப்பரிசில்களின் விதி முறைகளாக மாதாந்த வாழ்வாதாரப் படிகளுக்கு மேலாக முழுக் கற்கைநெறிக் காலப்பகுதிகளுக்குமான கற்கைக் கட்டணங்களையும் கொண்டுள்ளது.

தங்குமிடப்படி பொருத்தமானவர்களுக்கு புத்தகங்கள், காகிதாதிகள், உபகரணங்கள் ஆகியவற்றுக்கான வருடாந்த கொடுப்பனவுகள், இந்தியாவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட கற்கை சம்பந்தமான போக்குவரத்து செலவு, சுற்றுப் பிரயாணத்திற்கான விமானப் பயண சீட்டு, ICCR புலமைப்பரிசில்களும் உடனுதவியாக கிடைக்கும் பல அனுகூலங்களுக்கு மேலதிகமாக உடல்நலப் பராமரிப்பு வசதிகள், முதலாம் வகுப்பு புகையிரத போக்குவரத்து மற்றும் நாட்டுக்குள் வெவ்வேறு இடங்களுக்கு கல்விச்சுற்றுலாவிற்காக வருடாந்த கொடுப்பனவுகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் பட்டப்படிப்பு பட்டப்பின் படிப்பு, ஆய்வு கலாநிதி பட்டப்படிப்பு கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் திட்டத்தில் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து சிறந்த தகைமையுள்ளவர்களை இந்திய அரசாங்கம் தெரிவுசெய்யவுள்ளது. இந்தியாவில் உள்ள முன்னோடிப் பல்கலைக்கழகங்களில் இளமாணி முதுமாணி மற்றும் கலாநிதிப்பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் உயர் கல்வி அமைச்சோடு கலந்தாலோசித்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

அனைத்துப் புலமைப்பரிசில்களும் மாதாந்த வாழ்வாதாரப் படிகளுக்கு மேலாக முழுக்கற்கை நெறிக் காலப்பகுதிகளுக்குமான கற்கைக் கட்டணங்களையும் கொண்டுள்ளது. மேலும் இப் புலமைப்பரிசில்கள் இருப்பிடப்படிகள், புத்தகங்கள், காகிதாதிகள் ஆகியவற்றுக்கான வருடாந்த கொடுப்பனவுகள் கொண்டுள்ளது. இதுதவிர அனைத்து ICCR புலமைப்பரிசில்களும் உடனுதவியாக கிடைக்கும் பல அனுகூலங்களுக்கு மேலதிகமாக உடல்நலப் பராமரிப்பு வசதிகள், இந்தியாவில் ஆகக்கிட்டிய தூரத்தில் உள்ள இடத்திற்கு சென்றுவர விமானப் பயணச்சீட்டு, நாட்டுக்குள் வெவ்வேறு இடங்களுக்கு கல்விச் சுற்றுலா விற்கான கொடுப்பனவுகள் ஆகியவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக்கோரியுள்ளது. முழுமையாக பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்தினம் இளமாணிப் பட்டப் படிப்புக்கானது 10.02.2013ஆகவும் முதுமாணி/ கலாநிதிப் பட்டப்படிப்புக்கானது 20.02.2013 ஆகவும் இருக்கும். (தொடரும்....)

# பதிவிறக்கப் பெட்டகம்

காதல் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தன்மை. காதலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்காவிட்டால் காதல்வயப்பட்டிருக்க மாட்டார்கள். – ரோச்பௌகால்ட்

காதல் என்பது நாம் ஒரு பெண்ணை சந்திப்பதற்கும், அவள் ஒரு உணவுக்காகும் மீனைப் போன்றவள் என்பதை நாம் கண்டுபிடிப்பதற்கும் இடையே உள்ள ஒரு மகிழ்ச்சியான இடைவேளைதான். – ஜோன் பாரிமோர்

காதல் மானிடத்திற்குக் கிடைத்த மதிப்புமிக்க நன்கொடை. – பேணாட் ஷோ

காதல், கொடுமையான உலகிலிருந்து நம்மைத் தனிப்படுத்தி நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாய் உள்ளது. – டயன் அக்கர்மென்

காதல் – மனித வாழ்வின் நித்தியமான அறங்களில் ஒன்று. அது வரும்போது, அதைச் சாத்தி வைக்கும் கதவுகள் இதுகாறும் இல்லை. காதல்கள் அகப்பொருள் இலக்கணம் படித்துவிட்டு வருவதில்லை. குளம் ஆறு கடல் சம தளம் எங்கும் பெய்துவிட்டுச் செல்லும் மழை அது. ஜூலியட டுக்கு அது திடும் எனத்தோன்றும் மின்னல். அம்பிகாபதிக்கு நெருப்பு ('...உருகி, உடல் கருகி, உள்ளீரல் பற்றி எரிவது அவியாது என் செய்வேன். வரி அரவ, நெஞ்சிலே தோய்த்த நளின விழிப பெண் பெருமாள், நெஞ்சிலே இட்ட நெருப்பு...'). மஜ்னுவான கயஸுக்கு மரண தாகம். அது பிறப்புச் சான்றிதழ் பட்டதல்ல. வர்க்கமும் வயதும் சாராது வீசும் பொதுக்காற்று அது. காதலில் காதல்தான் இருக்கிறதே தவிர கள்ளக் காதல், வெள்ளைக் காதல் இல்லை. – பிரபஞ்சன்

உலகம், இதுகாறும் சந்தித்த உயிர்க்கொலைகள், இதுகாறும் நடந்த யுத்தங்களால் நிகழவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் உலக யுத்தங்களாலும் கூட அது நிகழவில்லை. மாறாக, மனம் உடைந்த காதலர்களின் மரணமே எண்ணிக்கையில் மிக அதிகமானது. – ஓஷோ

'காதல் இனிக்கும்' என்று சொல்பவன் காதலைப் பற்றித் தெரியாதவன். 'காதல் கசக்கும்' என்று சொல்பவன் காதலிக்கத் தெரியாதவன். – வலம்புரி ஜான்

மனிதனின் வலிமை இரண்டே இரண்டு விஷயங்களில் பயன்படாது. ஒன்று, மரணம். இன்னொன்று காதல். – ஸ்பானியப் பழமொழி

ஒவ்வொரு மனிதனையும் வாழ்நாளில் ஒரே ஒரு முறை தூக்கத்திலிருந்து எழுப்புகிறது காதல். – ஆங்கிலப் பழமொழி

எனக்குத் தெரிந்து ஒரே ஒரு கடமைதான் இருக்கிறது – காதலிப்பது. – ஆல்பெர் காம்யு

காதல் என்பது ஒருவருக்குமே உரிமையில்லாத ஒரு நிலம். அங்கு இருவருமே பாதுகாப்புடன் இருக்கிறார்கள். எல்லைகளுக்கிடையே ஒரு தூதுவராக அது இருக்கிறது. சந்தேகம் நிறைந்த சதுப்பு நிலத்தில் காதல் ஒரு பேரின்பத் தீவு. – டயன் அக்கர்மென்

காதல் – நரகத்தில் அவலத்துக்கு நடுவிலும் சொர்க்கத்தை நிர்மாணிக்கிறது. – வில்லியம் பிளேக்

என் இதயத்துக்குள் உன்னைப் பூட்டிவைத்து சாவியை எப்போதோ வீசி எறிந்துவிட்டேன். – கிரேக்க மொழிக் கவிதை

நட்பு காதலை விட சோகமானது. ஏனெனில் அது காதலை விட அதிக நாட்களுக்கு நீடிக்கிறது. – ரைட்

பாலுணர்வு போல் அடிப்படையையே நுட்பமாக அசைப்பது வேறெதுவுமில்லை, ஏனெனில் அதை விட நெருங்கிய உறவு வேறெதற்கும் இல்லை. காமத்தில் ஓர் உடல் இன்னோர் உடல் மீது இயங்குகிறது. இன்னோர் உடல் இந்த உடல் மீது இயங்குகிறது. – ரொபேர்ட்டோ கலாஸ்ஸோ

**காதலின் ஏழு நிலைகள்:**

1. attraction – ஈர்ப்பு 2. infatuation – கவர்ச்சி 3. love - காதல் 4. reverence - பக்தி 5. worship - வழிபாடு 6. passion - பித்து 7. death - மரணம்

எவரின் தலை மீது காதலின் நிழல் உள்ளதோ
அவரின் பாதத்தின் கீழ் சொர்க்கம் ஆகிவிடும்
எல்லோரும் இந்த நிழலில் செல்லுங்கள்
பாதங்கள் சொர்க்கத்திற்கு செல்லட்டும்

– சூஃபி பாடல்

# அமெரிக்கா எங்களைக் கைகழுவினால் கைகொடுக்க சீனா தயாராக உள்ளது

## கோத்தாவின் பிந்திய இராஜதந்திரம்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட குற்றவியல் பிரேரணை செயற்பாடுகள் காரணமாக, இலங்கைக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு முதலீடுகள் குறைவடையலாம் என்று அண்மையில் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்சேல் சிசோன் நேற்றுமுன் தினம் மாத்தறையில் வைத்து இதனை மீண்டும் வலியுறுத்தி இருந்தார்.

இலங்கையில் சட்ட ஒழுங்கை சக்திமயப்படுத்த 4.5 மில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத்திட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

இந்த கருத்துக்கு பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ பதில் வழங்கினார்.

அமெரிக்காவினால் மாத்திரம் இன்றி, எந்த ஒரு வெளிநாட்டு தரப்பும், ஏன் இராணுவத்தினரை தண்டனைக்கு உட்படுத்துவதில்லை என்ற கேள்வியை தம்மிடம் எழுப்புவதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால், இலங்கைக்கான பயிற்சிகளை இடைநிறுத்தும்.



இது ஒன்றும் பெரிய விடயம் இல்லை.

அமெரிக்கா தமது பயிற்சிகளை இடைநிறுத்துமாக இருந்தால், சீனாவிடம் அவ்வாறான பயிற்சிகளை பெற்று கொள்ள முடியும்.

இதனைதவிர வேறொன்றும் செய்வதற்கு இல்லை என்று அவர் தெரிவித்தார்.

### பட்டப்படிப்பு இப்போது இலகு க.பொ.த.(சா/த)சித்தி அவசியமில்லை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்கள் 2013 ஆம் ஆண்டில் பட்டப் படிப்பொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2013 இல் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் தேசிய நிகழ்வு திருகோணமலை வித்தியாலோக வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், தகவல் தொழில்நுட்பப் பட்டப்படிப்புக்காக மேற்படி பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்கள் உள்வாங்கப்படுவர் என்றும் கூறினார்.

### கூட்டமைப்பு தூதுக்குழு தென்னாபிரிக்கா பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவொன்று விரைவில் தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புக்கு சென்று அமரர் இராசமாணிக்கத்தின் 100 ஆவது பிறந்த தின விழாவில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு திரும்பியதும் வெளிநாட்டுப்பயணங்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் முதலில் தென்னாபிரிக்கப் பயணததினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் இந்தியாவில் இருந்து திருகோணமலை திரும்பிய சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தென்னாபிரிக்க பயணம் குறித்து கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்: தென்னாபிரிக்கா நடுநிலை வகிக்கவில்லை, தனது பட்டறிவுகளையே எம்முடன் பகிர்ந்து கொள்ளவிரும்புகின்றது.

எங்களோடும் அரசாங்கத்துடனும் தங்களின் அனுபவங்களையே பகிர்ந்து கொள்ள தென்னாபிரிக்கா விரும்புகின்றது. இந்த அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்வதில் எவ்வித மறுப்பும் இல்லை. இதனால் நன்மை மட்டுமே ஏற்படும். இதற்கு எமது சம்மதத்தையே தெரிவித்துள்ளோம் என்றார்.

### எதைப்பற்றியும் அலட்டிக்கொள்வதில்லை மகிந்த குறித்து ஏ.எவ்.பி. வர்ணிப்பு

(கொழும்பு)

ஷிராணி பண்டாரநாயக்காவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கியதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச நாடுகளின் விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ள போதிலும், அவர் இது தொடர்பாக அலட்டிக்கொள்ளவில்லையென ஏ.எவ்.பி.செய்திச் சேவை சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், பொதுநலவாய நாடுகளின் ஒன்றியம், பிரிட்டன் போன்றவை பிரதம நீதியரசரை நீக்கியமை தொடர்பில் இலங்கையை கடுமையாகச் சாடியுள்ள போதிலும் இலங்கைக்கு சீனாவின் ஆதரவு தொடர்ந்தும் கிடைத்து வருவதாக லண்டனைத் தளமாகக் கொண்ட சிரேஷ்ட ஆய்வாளர் காரெத் பிரைஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சிறுமிமீது வல்லுறவு முயற்சி; இராணுவச் சிப்பாய்க்கு கத்திக்குத்து

## தெற்கில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள்

(கொழும்பு)

12 வயதான சிறுமியை வல்லுறவுக்குட்படுத்த முயன்ற இராணுவ வீரர் ஒருவரை சிறுமியின் தந்தை கத்தியால் குத்திய சம்பவமொன்று ராஜாங்கனை - யாய பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது காயமடைந்த இராணுவ வீரர் ராஜாங்கனை கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமியின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் மேற்படி இராணுவ வீரர், அச்சிறுமியின் வீட்டுக்குச் சென்று தனது கையடக்கத் தொலைபேசியிலிருந்த பாலியல் தொடர்பான வீடியோக்களை சிறுமிக்கு காண்பித்த நிலையில் அவரை வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார்.

இதன்போது, குறித்த சிறுமி சத்தமிட்டு கத்தியதை அடுத்து அங்கு விரைந்த சிறுமியின் தந்தை, இராணுவ வீரரை தப்பிச் செல்ல விடாது தடுத்து கத்தியால் குத்தியுள்ளார்.

சந்தேகநபரான இராணுவ வர்ர் பொலிஸாரால் கைது செயயபபட்டுள்ள நிலையில், அவருக்கான சிகிச்சைகள் முடிவடைந்ததும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்று ராஜாங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### பொலிஸ் அதிகாரிகளுக்கு காத்திருக்கிறது திடீர் இடமாற்றம்

அடுத்தவாரம் உத்தரவுகள் பறக்கும்

(கொழும்பு)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 140 பேருக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீர் இடமாற்ற உத்தரவுகளைப் பிறப்பிக்க பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தீர்மானித்துள்ளார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரிகள் உள்ளிட்டோர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

நாட்டில் 430 பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் கடமையாற்றி வரும் உயர் அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையிலும் சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எதிர்வரும் வாரங்களில் இந்த இடமாற்ற உத்தரவுகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

# வடக்கில் மேலோங்குகிறது அராஜகம் ஜனநாயகம் புதைகுழிக்குள் முடக்கம்

## போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

ஜனநாயகம் இன்று குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. இராணுவ அராஜகமே மேலோங்கியுள்ளது. புனர்வாழ்வுக்குப பின் விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகள் தொடர்பில் கிராமங்களுக்குச் சென்று விசாரணை நடத்தும் அளவுக்கு இந்த இராணுவ அராஜகம் மேலோங்கியுள்ளது என்று சகோதரத்துவத்திற்கான மக்கள் அரண் அமைப்பின் உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

சகோதாரத்துவத்திற்கான மக்கள் அரண் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியா, ரோயல் காடின் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் கூறுகையில்,

வடக்கு கிழக்கு பிரதேசமென்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் யுத்தத்தின் பிடியில் சிக்கி தவித்து 2009 ஆம் ஆண்டு இந்த இராணுவத்தை நம்பி, அரசாங்கத்தை நம்பி வந்தபோது ஜனநாயகத்தை பெற்று தருகின்றோம், சுதந்திரத்தை பெற்று தருகின்றோம் என்று கூறியவர்கள் இன்று அந்த ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து விட்டு மக்கள் மீது அராஜகத்தை பிரயோகித்து இருக்கின்றார்கள்.

அந்த அராஜகத்தின் விளைவாகவே மீள்குடியேற்றம் என்ற போர்வையில் மக்கள் மீண்டும் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். இறுதியாக மெனிக்பாமில் இருந்த 178 குடும்பங்களை சேர்ந்த 611 பேர் இருந்தபோது அவர்களை மீள்குடியேற்றி விட்டோம் இந்த நாட்டில் அகதிகள் இல்லை. அகதி முகாம்கள் இல்லை என இந்த அரசாங்கம் சொல்லிக் கொண்டது.

ஆனால் அவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்கள் எங்கிருக்கின்றார்கள் என்று தேடிப்பார்க்கும்போது அவர்கள் முல்லைத்தீவில் கேப்பாபிலவு பிரதேசத்தில் மீளவும் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். அனைவரும் அநாதைகளாக்கப்பட்டுள்ளார்கள்.

அது மாத்திரமல்ல அன்று மெனிக்பாம் மாத்திரமே அகதிமுகாமாக இருந்தது. இன்று மீள்குடியேற்றப்பட்ட மக்களை பார்க்கும்போது வன்னி பிரதேசம் முழுவதும் அகதிமுகாமாக மாறியிருக்கின்றது. வன்னி முழுவதும் கூடாரங்களால் நிரம்பி வழிகின்றது.

இந்த மக்களுக்கு புனர்வாழ்வு அழிக்கப்படவில்லை என்பது இந்த பிரசேத்திற்கு சென்று பார்வையிடுபவர்களுக்கு நன்றாகத்தெரியும். எனவே நாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அவரகளுக்குரிய காணிகளை வழங்க வேண்டும். புதுக்குடியிருப்பு பிரதேசத்தை சென்று பார்க்கின்றபோது அங்கு முழுவதும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.


குறிப்பாக இந்த பிரதேசத்தில் 2600 ஏக்கர் நிலம் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ளது. இவை 1000 குடும்பங்களுக்கு சொந்தமான காணிகள். இந்த 1000 குடும்பங்களையும் அகதிகளாக்கி விட்டு அநாதைகளாக்கி விட்டு இராணுவம் கையகப்படுத்தியுள்ளது.

இந்த காணிகளில் இராணுவத்தினர் என்ன வயல் செய்யப்போகின்றாகளா? மீன் பிடிக்கப் போகின்றார்களா? அல்லது வேறேதும் விவசாயம் செய்யப் போகின்றார்களா? இல்லை. அவ்வாறு இருக்கும் போது இந்த மக்களின் காணிகளை அபகரித்து விட்டு அவர்களை வேறு இடததில் குடியேற்றியுள்ளார்கள். இதனை சகோதரத்துவத்தின் மக்கள் அரண் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றது எனத் தெரிவித்தார்.

# கல்வி முரசின் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விஞ்ஞான பாட விஷேட செயற்றிட்டம் - 2013

ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc)

1) அங்கியொன்றின் எல்லா உயிர்ப்பண்புகளையும், இயல்புகளையும் வெளிக்காட்டும் மிகச்சிறிய அலகே கலங்கள் ஆகும்.




உரு X, Y ஐ இனம் காண்க

x : ........................................ Y : ........................................

பின்வரும் பகுதிகளைப் பெயரிடுக

A : ........................................ D : ........................................

B: ........................................ E : ........................................

C :........................................ F : ........................................

உரு Y ஆனது X இலிருந்து வேறுபடும் இரு இயல்புகள்

அ) ........................................ கொண்டிருத்தல்.

ஆ) ........................................ கொண்டிருத்தல்.

கலத்தின் முக்கிய பகுதியாகவும், கட்டுப்பாட்டு மையமாகவும் தொழிற்படுவது ........................ ஆகும். கருவினுள் காணப்படும் ........................ எனும் அமைப்புகள் அங்கிகளின் சிறப்பான பண்புகளைத் தீர்மானிக்கும் ........................ கொண்டுள்ளன.

முதலுருவினுள் உள்ள மற்றொரு புன்னங்கம் ........................ ஆகும். கலச்சுவாசம் நிகழும் தானம் இதுவாகும்.

2) ஒரு தொழிலையோ ........................ தொழில்களையோ நிறைவேற்றவென சிறந்தலடைந்த ........................ இழையம் எனப்படும். ........................ , ........................ என்பன தாவர இழையங்களாகும். பாய. நிலையிலுள்ள இழையம் ........................ ஆகும்.

| இழையம் | தொழில் |
| --- | --- |
| 1) மேற்றோல் | 1) ........................ |
| 2) குருதி | 2) ........................ |
| 3) தசை | 3) ........................ |
| 4) நரம்பிழையம் | 4) ........................ |

குருதியின் கூறுகள் ........................ , ........................ , ........................ , ........................ என்பனவாகும்.

3) ........................ தேகமெங்கும் பரவிக் காணப்படும். சூழல் பற்றிய அறிவைப் பெறவும், அதற்கேற்ப துலங்கலைக் காட்டவும் ........................ உதவுகின்றது. ........................ களும் ........................ வும் கூட்டாக ........................ ஆக்கியுள்ளன.

நரம்புத்தொகுதி ........................ , ........................ என இரு பகுதிகளைக் கொண்டது. நரம்புகளில் ........................ , ........................ , ........................ என மூவகையுண்டு. ஒவ்வொரு நரம்புக் கலமும் ........................ யும் அதிலிருந்து பரவும் ........................ யும் கொண்டது. நீளமான நரம்புமுனை ........................ எனவும் குறுகிய நரம்புமுனை ........................ எனவும் அழைக்கப்படும்.

4) உடலினுள் நிகழும் அசைவுகள் ........................ களினாலேயே ஏற்படுகின்றன. மூன்று வகையான தசையிழையங்கள் உள்ளன.
1) ........................ 2) ........................
3) ........................ சிறத்தல் குறைவான எளிய தசை ........................ ஆகும். ........................ , ........................ போன்ற உறுப்புகளில் மழமழப்பான தசை காணப்படும். என்புகளுடன் இணைந்துள்ள தசைகள் எ எனப்படும். ........................ , ........................, ........................ போன்ற பாகங்களில் இவை காணப்படும்.

இத்தசைகள் ........................ இயங்குவதில் ........................ தசையையும் ........................ கொண்டிருத்தலில் ........................ தசையையும் ஒத்தது. ........................ கொண்டிருத்ததில் இவ்விரு தசைகளிலுமிருந்து வேறுபடும்.

5) தாவரத்தின் சகல பகுதிகளையும் போர்த்தியுள்ள இழையம் ........................ இழையமாகும். ........................ , ........................ , ........................ என்பவற்றிலிருந்து அக இழையங்களைப் பாதுகாப்பது இதன் தொழிலாகும். நீரில் மிதக்கும் இலைகளில் மேற்புற மேற்றோலிலேயே ........................ , ........................ உண்டு.

வேரின் மேற்றோல் கலங்களிலிருந்து உருவானவை ........................ ஆகும். இதனூடாகவே தாவரத்திற்குத் தேவையான நீரும் கனியுப்புகளும் அகத்துறிஞ்சப்படும்.

6) ........................ கூடிய இடத்திலிருந்து ........................ , ........................ இடத்திற்கு திண்ம, திரவ, வாயுத் ........................ அசைந்த செல்லல் ........................ எனப்படும். குறித்த சில பதார்த்தங்களை மட்டும் ........................ மென்சவ்வு ........................ மென்சவ்வு எனப்படும்.

........................ மென்சவ்வினூடாக ........................ கூடிய பகுதியிலிருந்து ........................ குறைந்த பகுதிக்கு கரைப்பான் துணிக்கைகள் பரவுதல் ........................ எனப்படும். இழையங்களினுள் ........................ உட்புகுதல் ........................ பிரசாரணமெனவும், இழையங்களிலிருந்து ........................ புறப் ........................ எனவும் அழைக்கப்படும்.

பரவலுக்கு ........................ கலமென்சவ்வினூடாக ........................ புகுதல் ........................ ,........................ எனப்படும்.

1) மனித உடலில் பதார்த்தங்களைக் கொண்டுசெல்ல உதவும் ஊடகம் ........................ ஆகும்.

குருதி வங்கிகளில் குருதி உறையாது தடுக்க ........................ அல்லது ........................ போன்ற ஒரு பதார்த்தம் சேர்க்கப்படும்.

இரட்டைக் குழிவான கருவற்ற ஈமோகுளோபின் கொண்ட குருதிக்கலம் ........................ ஆகும். அளவில் பெரிய கரு உடைய ஒழுங்கற்ற வடிவமுடையவை ........................ ஆகும். கருவற்ற சிறிய துணிக்கைகள் ........................ எனப்படும்.

இதயம் 4 அறைகளைக் கொண்டது. இடது சோணையறைக்கும், இதயவறைக்குமிடையே ........................ அமைந்துள்ளது. வலது சோணையறைக்கும் இதயவறைக்குமிடையே ........................ அமைந்துள்ளது. இவ்வால்புகளினால் ........................ புகும் குருதி மீண்டும் ........................ புகுவது தடுக்கப்படும். ஒப்பீட்டளவில் ........................ இதயவறைச் சுவரே அதிக ........................

இதயத்தை ........................ குருதியைக் கொண்டு செல்லும் கலன்கள் ........................ எனவும் இதயத்திலிருந்து குருதியை ........................ கொண்டு செல்பவை நாளங்கள் எனவும் அழைக்கப்படும். சோணையறைகள் சுருங்கும்போது ........................ , ........................ வால்புகள் ........................ இதய அறைகள் சுருங்கும்போது ........................ , ........................ வால்புகள் மூடப்பட ........................ வால்புகள் திறக்கும்.

2) குருதிக்கலன்களினுள் உள்ள ........................ யினால் ........................ சுவர்களின் மீது பிரயோகிக்கப்படும் அமுக்கமே ........................ எனப்படும். மருத்துவத் தேவைகளின்போது குருதியமுக்கம் B.P ........................ mm Hg என காட்டப்படும்.

........................ இதயம் சுருங்கி ........................ இதயத் ........................ எனப்படும். ........................ வீதத்தைக் கட்டுப்படுத்துவது ........................ ஆகும். இது ........................ சுவரில் ........................ திறக்குமிடத்திற்கு ........................ அமைந்துள்ளது.

உடலெங்கும் குருதியை விநியோகிக்க ........................ , ........................ , ........................ எனும் மூவகைக் குருதிக்கலன்கள் உதவுகின்றன. உடலின் சகல பகுதிகட்கும் ........................ விநியோகிக்கப்படுவதற்காக இதயத்தினூடாக ........................ செல்வதால் இது ........................ எனப்படும்.

கலங்களுக்கும் குருதிக்குமிடையே ........................, ........................ செயற்பாடு ........................ பாயத்தினூடாகவே நிகழும்.

3) ஒருவருடைய குருதியை வேறொருவருக்குப் பாய்ச்சுதல் ........................ ........................ எனப்படும். ........................ ........................ என்பவர் ........................ வகை குருதியினங்கள் உள்ளன எனக் கண்டறிந்தார். அவ்வகைகள் ........................ , ........................ ,........................ ,

........ என்பனவாகும். குருதியை ........ உம் ........ உம் ஒரே குருதி ........ சேர்ந்தவராயமைதல் வேண்டும். ........ இனத்தைச் சேர்ந்தவர்கள் பொது வாங்கி எனவும் ........ இனத்தைச் சேர்ந்தவர் ........ எனவும் அழைக்கப்படுவர்.

4) குருதியிலுள்ள ........ அளவு குறைவடைதல் ........ எனப்படும். அதிக ........, ........ போன்றவை இந்நோய் நிலைக்கான காரணிகளாகும். உணவில் ........, ........ ஆகியன குறைவடைவதால் ........ உற்பத்தி பாதிக்கப்படும்.

குருதியில் ........ அசாதாரணமாக ........ லியூக்கேமியாவாகும்.

குருதியில் குருதி உறைதலுக்கான காரணியின்மையால் ஏற்படும் நோய் ........ ஆகும். இது ஒரு ........ நோயாகும்.

குருதியில் குருதி உறைதலுக்கான காரணியின்மையால் ஏற்படும் நோய் ........ ஆகும். இது ஒரு ........ நோயாகும்.

குருதிக் கலன்களினுள் குருதிக்கட்டி சிறைப்படுவதால் உடற்பகுதிகளின் தொழிற்பாடு பாதிக்கப்படல் ........ ஆகும்.

5) நிணநீர் பாயம், ........ அற்ற குருதித் திரவவிழையத்தின் கட்டமைப்பை ஒத்தது. உடலெங்கும் உள்ள நிணநீர் கான்கள் ஒன்று சேர்ந்து ........, ........ எனுமிரு பிரதான கான்களை உருவாக்கும். அவை மீண்டும் முறையே ........, ........ எனுமிரு நாளங்களினுள் திறக்கின்றன.

தசைகள் ........ ஏற்படும் அமுக்கத்தினாலும் ........, ........ பொறிமுறையின் போதான உறிஞ்சற் செயற்பாட்டினாலுமே நிணநீர்பாயம் இதயத்தை நோக்கிச் செலுத்தப்படும். நிணநீர்கான்களில் ........, ........, ........ ஆகிய இடங்களில் நிணநீர் ........ அமைந்துள்ளன.

உடலினுள் புகும் நோய்க்கிருமிகளைக் கட்டுப்படுத்துவதில் ........ பெரும் பங்காற்றுகின்றது.

1) அங்கிகள் ........ மாற்றங்களுக்கேற்ப ........ களைக் காட்டும் ........, ........, ........, ........ ........ போன்றவை உணர்வுகளை அறிய உதவும். ........ ஆகும். அங்கியொன்றில் ........ ஏற்படுத்தக்கூடிய ........ தூண்டல் எனப்படும். ........ காட்டப்படும்போது ........ எனப்படும். ........ தூண்டல்களுக்கு ........ காட்டும் உடற்பகுதிகள் ........ எனப்படும்.

எமது உடற்பகுதிகள் ........ எனப்படும். எமது உடலிலுள்ள விளைவு காட்டிகள் ........, ........ ஆகும்.

தூண்டல் ........ செயற்பாட்டில் ........ விளைவு காட்டிக்குமிடையே தொடர்பேற்பது ........ ஆகும்.

2) நரம்புத்தொகுதியானது ........, ........ என இரு பகுதிகளைக் கொண்டது. நரம்பிழையத்தின் ஆக்க அலகு ........ ஆகும். புலன் நரம்புக்கலம் நீளமான ........ யையும் இயக்க நரம்புக் கலம் நீளமான ........ யையும் கொண்டிருக்கும்.

மூளை ........மென்சவ்வுகளால் மூடப்பட்டு என்பினால் ஆன ........ உள்ளது. மூளைய மென்சவ்வுகளாவன ........, ........, ........ என்பனவாகும். மூளையானது ........, ........, ........ எனும் மூன்று பகுதிகளாலானது. மூளையத்தின் தொழில்களாவன,

1) ........
2) ........
3) ........ என்பனவாகும்.

மூளியானது உடலின் ........ இயக்கத்தில் பங்குகொள்ளும் ........ ஒருங்கிசைந்து ........ ஏற்படுத்தும் நீள்வளைய மையவிழையம், இதயத்துடிப்பு, ........ போன்ற செயல்களைக் கட்டுப்படுத்தும்.

தூண்டல்களுக்கு ........ காட்டப்படும் ........ துலங்கல்களே ........ எனப்படும். தூண்டலின் பின் ........ துலங்கல் காட்டப்படுவதே இதன் சிறப்பியல்பாகும். தெறிவினையின் போது ........ இருந்து ........ வரை கணத்தாக்கம் ........ பாதை ........ எனப்படும். ........ தெறிவினை, ........ தெறிவினை என்பன இருவகைத் தெறிவினைகளாகும். ........ சுருங்குதல், ........, ........, ........ என்பன தெறிவினைகளாகும்.

3) பல்வேறு ........ சீராக நிறைவேற்றவென உறுப்புகள் அல்லது தொகுதிகள் ........ ........ தொழிற்படல் ........ எனப்படும். ........, ........ என இரு வகையுண்டு.

புலனுறுப்புகளுள் கண் முக்கியத்துவம் வாய்ந்தது. கண்ணீர்ச் சுரப்பிகளினால் சுரக்கப்படும் ........ மூலம்

1) ........
2) ........

மேலதிக கண்ணீர் ........ யினுள் செலுத்தப்படும். ........, ........, ........ எனும் மூன்று படைகள் கண்ணில் அமைந்துள்ளன. போசணையை வழங்குவது ........ ஆகும். கண்ணினுள் புகும் ஒளியினளவைக் கட்டுப்படுத்துவது ........ ஆகும். விழித்திரையில் ........, ........ எனுமிரு வகைக் கலங்கள் உண்டு. மஞ்சள் பொட்டில் ........ மட்டுமே காணப்படும். விழித்திரையில் தோற்றுவிக்கப்படும் விம்பம் ........, ........, ........ விம்பமாகும்.

4) காதுச்சோணையின் ........ அமைந்துள்ள ........ காதாகும். இது ........, ........, ........ எனப் பிரிக்கப்பட்டுள்ளது. உட்செவியும் ........ யும் ........ என்பினால் ஆன ........ அமைந்துள்ளன. செவிப்பறையால் பெறப்படும் ........ விரியலாக்குவதே ........ களின் தொழிலாகும். நடுச்செவியினுள் உள்ள அமுக்கத்தை ........ அமுக்கத்திற்கு ........ பேணுதல் ........ ஆகும். ........ கால்வாயினுட்பகுதியிலேயே ........ கலங்கள் காணப்படும். காதில் உள்ள ........ உடன் தொடர்பற்ற ........ பேண உதவுவது ........ உபகரணமாகும

5) மூக்குக் குழியின் ........ அமைந்துள்ள ........ கலங்கள் ........ வாங்கியாகத் தொழிற்படுகின்றன. இவை........ நரம்புக்கலங்களாகும். மணத்தின் ........ தொடக்கப் பெறுமானம் மிகக்குறைவாகும். எளிதில் ........ பதார்த்தங்களால் ........ கலங்கள் தூண்டப்பட்டு மண நுகர்ச்சி ........ ஊடாக மூளைக்குக் ........

நாக்கினால் உணரக்கூடிய அடிப்படைச் சுவைகள் ........, ........, ........, ........ என்பனவாகும். நாவின் ........ பகுதிகளில் வெவ்வேறு ........ உணரப்படும். நாக்கின் மேற்பரப்பில் ........ காணப்படும். இவை தூண்டப்படுவதனாலேயே சுவை உணரப்படும்.

உடலில் கவசமாய் அமையும் இழையம் ........ ஆகும். ........, ........, ........, ........, ........ ஆகிய 5 வகை உணர்வுகளையும் வாங்கும் தன்மை ........ இற்கு உண்டு.

6) ........ எனப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாகவே ........ ........ நிகழ்கின்றது. அகஞ்சுரக்கும் சுரப்பிகளினால் ........ சுரக்கப்படுகின்றன. இவை நேரடியாகவே ........ சேர்க்கப்படுவதால் இச் சுரப்பிகள் ........ சுரப்பிகளெனப்படும்.

கபச்சுரப்பியினால் ........ (STH) எனப்படும் ........ ஓமோன் சுரக்கப்படுகின்றது. ஆபத்தான சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்காக ........ செய்தல், ........ சுரப்பியால் சுரக்கப்படும் அதிரீனலின் ஆகும். குருதியிலுள்ள ........ மட்டத்தை மாறாது பேண உதவுவது ........ களால் சுரக்கப்படும் ........ ஆகும். ........ ஆண்களின் துணைப்பாலியல்புகளுக்கும் ........ பெண்களின் துணைப்பாலியல்புகளுக்கும் காரணமாயமையும் ........ குறைபாட்டினால் ........ குறைவாகச் சுரக்கப்படலே ........ க்குக் காரணமாகும். மலைப்பிரதேச மக்களிடையே இது பரவலாகக் காணப்படுவதற்கு மண்ணிலுள்ள ........ மண்ணரிப்பால் கழுவிச் செல்லப்படுவதே காரணமாகும்.

7) எமது புறச்சூழல் ........ ஆகும். எமது உடல் ........ சூழ அமைந்த ........ உம் குருதிக் கலன்களைச் சூழ அமைந்துள்ள ........ உடலின் ........ ஆகும். குருதி மயிர்க்குழாய்களிலிருந்து வெளியே பரவிய ........ அற்ற ........ இழையப் பாயமெனப்படும்.

........ மாறாது பேணுதல் ........ எனப்படும். மனித உடலின் சகல உயிர் ........ சீராக நிகழும் வெப்பநிலை ........ °C ஆகும். வெப்பநிலைச் சீராக்கத்தில் பங்கெடுக்கும் ஓமோன் ........ ஆகும். வெப்பநிலை குறையும்போது, இதயத்துடிப்பை அதிகரித்தல், ........ நுரையீரல்களின் ........ களை ........ செய்தல் போன்றன ........ இன் தொழிற்பாடாகும்.

சுகதேகி ஒருவரின் குருதியின் சராசரி குளுக்கோசுச் செறிவு ........ mm / 100ml ஆகும். குருதியில் குளுக்கோசுச் செறிவைச் சீராகப் பேண உதவுவது ........ ஆகும். ........ யினால் சுரக்கப்படும் ........ ஓமோனே உடலின் நீர் சமநிலையைப் பேண உதவும். அன்றாட வாழ்வில் ஒரு சீர் திடநிலையை சீராகப் பேண உதவும் வழிவகைகள் கொண்ட வாழ்க்கைக் கோலமொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் அவசியமானதாகும். (தொடரும்...)

# அழிந்துபோகும் பண்பாடுகளை மீட்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## - கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் -

(வடமராட்சி)

தமிழரது பண்பாட்டு விழுமியங்களோடு இணைந்த கலை கலாசாரம் சீரழிந்து மங்கிப் போகும் இக்கால கட்டத்தில் அடுத்த சந்ததியினர்களுக்குப் பயன்படும் விதத்தில் மீண்டும் அவற்றைக் கட்டியமைக்க வேண்டிய பாரிய பொறுப்பும் கடமை உணர்வும் எம் அனைவரையும் சார்ந்துள்ளது என கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளரும் சமாதான நீதவானுமாகிய சி.சற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி சனசமூக நிலையம் சர்மார்க்கசபை பாலர் பாடசாலை கலைவிழாவும் நெல்லியடி சனசமூக நிலைய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நெல்லியடி சனசமூக நிலையத்தலைவர் கிருஸ்ணராசா தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாம் அவசர உலகத்தில் வாழ்ந்து கொண்டிருகின்றோம். அதிலும் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனால் எம்மிலிருந்து பிரிக்க முடியாத வகையிலான மன உழைச்சல், மன அழுத்தங்களை தாங்கிக் கொண்டிருக்கின்றோம். இந்த வேளையில்தான் மகிழ்ச்சி, சந்தோசம், சிரிப்பு போன்றன எமக்கு மிகவும் தேவையான ஒன்றாக உள்ளன.

இவற்றுக்குத்தான் கலை அவசியமாக இருக்கின்றது. கலையானது மனதுக்கு இதத்தையும், உடலுக்கு சுறுசுறுப்பையும், உற்சாகத்தையும், மகிழ்ச்சியும் வழங்கக்கூடியது. அதுவும் பாலர் பாடசாலைச் சிறார்களின் பாடல், நடனம், அவற்றிலும் தனி நிகழ்வுகள் கூட்டு நிகழ்வுகள் என்பன மனதுக்கு இதத்தைத் தரக்கூடியவை. எனவே கிராமத்தில் உள்ள எல்லோரும் இவ்வாறான நிகழ்வுகளை (கலை) தவறாமல் நடத்திவருவதுடன் பங்கு கொண்டு வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சவால்களில் இருந்து விடுபட வழிவகை செய்து விடுகின்றது.

எனவே பெற்றோர்கள் பிள்ளைகளின் கற்றலுக்கு ஏற்ற சூழலை அமைத்துக் கொடுப்பதுடன் மட்டுமல்ல அவர்களின் பல திறமை ஆற்றலையும் வெளிக்கொண்டுவர வேண்டும் என அவர்தெரிவித்தார். (116)

# பொதுக்கூட்டம்

(கரணவாய்)

கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்ட அ.த.க. பாடசாலையின் அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள், புதிய நிர்வாகத் தெரிவு, பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி தொடர்பான ஆலோசனை என்பன இடம்பெறவுள்ளதால் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் நலன் விரும்பிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (18)

# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகத்தெரிவு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக எம்.எஸ்.ஏ. எம்.முபாறக் (அதிபர்), உபதலைவராக வி.மகேந்திரராசா (பிரதி அதிபர்), செயலாளராக எஸ்.எம்.எம்.பாயிஸ், பொருளாளராக செல்வி சபீலா முகம் மதுராசா ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக 11 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். (105)

# கண்காணிப்புக்குழு தெரிவு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் காவில் கிராய் வெள்ளவாய்க்கால் வீதி புனரமைத்தல் தொடர்பான சமூக கண்காணிப்புக்குழுக்களைத் தெரிவு செய்யும் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்புனரமைப்பு வேலைகளின்போது பொதுமக்கள் சார்பில் வேலைகளைக் கண்காணிக்கவும், மக்கள் பங்களிப்பு வேலைகளை முன்னெடுக்கவும் ஏதுவாக இக்கண்காணிப்புக்குழு அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# ஆலயத்தைச் சுற்றி வேலி அமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை - மருதடி முருகன் ஆலய வீதியில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஆலய தர்மகத்தா சபையினர் தடைசெய்திருந்தனர்.

இருப்பினும் தென்பகுதியில் இருந்துவரும் வியாபாரிகளும், தனியார் போக்குவரத்து வாகனங்களும் வீதியின் மேற்குப் பக்கமாக வாகனங்களை நிறுத்தியதோடு வடக்குப்புற வீதியிலும் வாகனங்களை நிறுத்தினர்.

கோவில் ஆலய வீதியில் வாகனங்களை நிறுத்துவதால் ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுகிறது எனக்கருதிய தர்மகத்தா சபையினர், வீதிக்கு ஆலயத்தின் மேற்குப்பக்கமாக வேலி அமைத்துள்ளனர். இவ்வேலி ஆலய உற்சவத்தில் மட்டும் அகற்றப்படும் எனத் தெரிவிக்கின்றனர். (109)

# கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் நடத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 3 டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகள் பகுதி நேரமாகவும் முழுநேரமாகவும் இடம் பெறுவதுடன் சகல கற்கை நெறிகளும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

தகுதியான பரீட்சார்த்திகள் ஒருபொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை பெறுபேறுகள் மூலம் தெரிவு செய்யப்படுவார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி, பிறவுண்வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 18.01.2013 வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிட முடியும்.

# நட்டாங்கண்டல் கிராமத்திற்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

## - மக்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நட்டாங்கண்டல் கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததால் இக்கிராம மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாதுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், மின்சார வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதனால் தாம் இரவு வேளைகளில் மண்ணெண்ணெய் விளக்குகளிலேயே பொழுதைக் கழிப்பதாக தெரிவிக்கின்றனர்.


இதேவேளை நட்டாங்கண்டல் வைத்தியசாலையிலும் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டு மக்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படுகின்ற போதிலும் மின்சார வசதிகள் இன்மை குறைபாடாகவே இருப்பதாகவும் மின்சார தேவை அவசியமாகையால் மின்பிறப்பாக்கி இயந்திரம் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமமாகக் காணப்படுவதுடன் இக்கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் இரவு வேளைகளில் தாம் கல்விகற்க முடியாமல் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்திற்கு மின்சார விநியோகத்திற்கென மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள நிலையில், இணைப்புக்கள் வழங்கப்பட்டால் தாம் அன்றாடச்செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்ள முடியும் என இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட பனங்காமம், மூன்றுமுறிப்பு, கிராட்டிக்குளம், விநாயகர்புரம், பொன்நகர், பூவரசக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 240 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் அவையும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில், மின்சார விநியோகம் இல்லாத கிராமங்களுக்கு மின்சார வசதியை வழங்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)







யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் மதிய உணவு வழங்கும் தேசிய வேலைத்திட்டமும் யாழ்.வைத்திஸ்வராக் கல்லூரியின் கால்கோள் விழாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின், நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி மாணிக்கராசா உள்ளிட்ட பிரதிநிதிகள் வரவேற்கப்படுவதையும், யாழ்.வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மங்கள விளக்கேற்றுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் மதிய உணவு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைப்பதையும் காணலாம்.

# ஈரான் அணுவிவகாரத்தில் சுமுகமுடிவு எட்டப்படவில்லை

## சர்வதேச அணுசக்திக்கழகம்




ஈரானுடன் சுமுகமான முடிவு எட்டப்படவில்லை என சர்வதேச அணுசக்தி கழகம் தெரிவித்துள்ளது. ஈரான் இரகசியமாக அணு ஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன் பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.இந்நிலையில் அணு ஆயுத தயாரிப்பு குறித்து ஈரானுடன் பேச்சுவார்த்தை நடந்து வந்தது. இதில் சுமுகமான முடிவு எட்டப்படாததால், உடன் படிக்கை எதுவும் இறுதிமுடிவு செய்யப்படவில்லை.

அடுத்த ஆலோசனைக் கூட்டம் வருகிற பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெறும் என சர்வதேச அணுசக்தி கழகம் அறிவித்துள்ளது.இது தொடர்பாக சர்வதேச அணுசக்தி கழகத்தின் தலைமை அணுசக்தி ஆய்வாளர் ஹெர்மன் நகேர்ட்ஸ் கூறுகையில், கடந்த டிசம்பர் மாதம் நான் ஈரான் சென்று வந்த பின்னர், இந்த வாரத்தில் இறுதி முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இது தொடர்பாக எவ்வித முடிவும் எட்டப்பட வில்லை. பெப்ரவரி 12ஆம் திகதி அடுத்த கூட்டம் நடைபெறும். பார்சின் இராணுவ வளாகத்துக்கு எந்த அனுமதியும் இம்முறையும் வழங்கப்படவில்லை என்றார்.பார்சின் என்பது ஈரானின் இராணுவ வளாகமாகும், அங்கு அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# அரச குடும்பத்தை விமர்சித்தவருக்கு சிறை







தாய்லாந்து அரச குடும்பத்தை விமர்சித்த நகைச்சுவை நடிகருக்கு இரண்டாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டில் பூமிபால் அதுல்ய தேஜ் (வயது-85) மன்னராக உள்ளார். இவர் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் மீது தாய்லாந்து மக்கள் மிகுந்த அன்பும், மரியாதையும் வைத்துள்ளனர். இந்நிலையில் 2010ஆம் ஆண்டு தலைநகர் பாங்கொக்கில் நடந்த கண்டனப்பேரணியில், அந்நாட்டு நகைச்சுவை நடிகர் யொசாவரிஸ் சக்லோமி(வயது-54) என்பவரும் பங்கேற்று மன்னர் குடும்பத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.இதை அடுத்து அவர் மீது பாங்கொக் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதில் அவருக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாகவும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# சீன பொருளாதாரத்தில் சரிவு



உலக பொருளாதாரமே நிலை குலைந்த நிலையிலும், சீனாவின் பொருளாதாரம் தொடர்ந்து படு வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது.இந்நிலையில் கடந்த 13 ஆண்டுகளில் முதன் முறையாக மிக குறைவான அளவான 7.8 சதவிகித வளர்ச்சிக்கு சரிந்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு 10.4 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, 2011ஆம் ஆண்டில் 9.3 சதவிகிதமானது. இந்நிலையில் இப்போது மேலும் சரிந்து 7.8 சதவிகிதத்துக்கு வந்துள்ளது.சீனாவின் பொருளாதாரம் பெரும்பாலும் ஏற்றுமதியை சார்ந்தே உள்ளது. சீனப் பொருட்களை நம்பித்தான் பல அமெரிக்க, ஐரோப்பிய சூப்பர் மார்க்கெட்களே இயங்கி வருகின்றன.இந்நிலையில் அமெரிக்கா, ஐரோப்பாவில் நிலவும் தொடர் பொருளாதார மந்தம் காரணமாக சீனாவின் இறக்குமதி பெருமளவு குறைந்துவிட்டது, இதுவே பொருளாதார சரிவுக்கு காரணம் என கருதப்படுகிறது.


# இங்கிலாந்தில் கடுமையான பனிப்பொழிவு: 3000 பாடசாலைகள் மூடல்



கடும் பனியில் இங்கிலாந்து சிக்கித் தவிப்பதால், 3000இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டன.இங்கிலாந்தில் கடந்த சில நாட்களாக கடும் பனிப் பொழிவு நிலவுகிறது. சாலைகள், விமான நிலையங்கள், ரயில் தண்டவாளங்களில் பனி சூழ்ந்துள்ளது, இதனால் போக் குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக பிரபலமானதும், பரபரப்பானதுமான ஹீத்ரு விமான நிலையத்தில் பயணிகள் தவித்து வருகின்றனர். பனி காரணமாக இந்த விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மட்டும் 365 விமானசேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. ஓடு பாதைகளில் மலை மலையாய் குவிந்துள்ள பனியை 24 வாகனங்களில் ஊழியர்கள தொடர்ந்து அப் புறப்படுத்தி வருகின்றனர். இதேபோல் பிர்மிங்காம் விமானநிலையம், சவுத்டாம்டன் விமானநிலையத்திலும் பல விமானங்கள் இயக்கப்பட வில்லை. போக்குவரத்து முடங்கியதால் நாடு முழுவதும் 3,000 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. மேலும அதிகளவு பனிப்பொழிவு இருப்பதால், மக்கள் வெளியே வராமல் வீடுகளுக்குள் இருக்கும்படி வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.


# செவ்வாய் கிரகத்தில் நீளமான ஆறு



செவ்வாய்க் கிரகத்தில் நீளமான ஆறு இருந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பா விண்வெளி நிறுவனம்(ஈஎஸ்ஏ) செவ்வாய்க்கிரகத்தை அதிநவீன கமராவால் படம் பிடித்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், செவ்வாய்க் கிரகத்தின் ரியுல் வாலிஸ் எனும் பள்ளத்தாக்குப் பகுதியில் 1,500 கி.மீ. நீளத்துக்கு நதி ஓடியதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. ஆற்றின் வழித்தடம் தெளிவாக உள்ளது.7 கி.மீ. அகலம், 300 மீற்றர் ஆழமுடையதாக அந்நதி இருந்துள்ளது. ஆமஸானியன் காலம் மற்றும் ஹெஸ்பேரியன் காலங்களில் பனிப்பாள நகர்வும் பிறகு நீராகவும் நதி ஓடியிருக்கிறது.இந்நதிக்கு துணை நதிகளும் இருந்துள்ளன, 180 கோடி ஆண்டுகள் மற்றும் 350 கோடி ஆண்டுகளுக்கும் முற்பட்டதாக இக்காலங்கள் கருதப்படுகின்றன.

# மின் வடிவில் புத்தகங்கள்; உலகின் முதல் கணனி நூலகம்




அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள சான் அண்ட்டோனியோ நகரில் நூல்களே இல்லாத நூலகம் ஒன்றை நெல்சல் உல்ஃப் என்பவர் திறக்கத் திட்டமிட்டுள்ளார்.இந்த நூலகத்தில் புத்தகங்கள் மின்வடிவில் கிடைக்கும். நூறு மின் புத்தகங்கள;(E-Reader) வாசகர் மத்தியில் சுற்றுக்கு விடப்படும்.

சிறுவர்களுக்கு மட்டும் என்று ஐம்பது மின் புத்தகங்கள் இருக்கும். ஐம்பது கணனி நிலையமும், 25 மடிக் கணனியும்(Laptops), 25 கைக்கணனியும்(Tablets) இருக்கும்.இந்த நூலகத்திற்கு வரும் வாசகர்கள் தங்களின் மின் புத்தகங்களைக் கொண்டுவந்து படிக்கலாம். இங்குள்ள புத்தகங்களை மின்னணுப்பதிவு செய்து கொள்ளலாம். இந்த நூலகக் கட்டடம் 4,989 சதுர அடிப்பரப்பளவில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்படும்.

அப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துவிட்டு மின்னணு நூலகத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் நெல்சன் உல்ஃப், .இவர், பத்தாயிரம் நூல்களை இந்தப் புதிய மின்னணு நூலகத்திற்குக் கொண்டுவருவதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளார். இதற்கு 2.5 இலட்சம் டொலர் தேவைப்படும்.

# நிலநடுக்கம் ஏற்பட்ட இடத்தில் வெந்நீர் ஊற்றெடுப்புக்கள்



கனடாவில் நிலநடுக்கம் ஏற்பட்ட இடங்களிலிருந்து தற்போது வெந்நீர் ஊற்று பெருகி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் 7.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலையில் கிவாய் ஹானஸ் என்ற தேசிய பூங்கா உட்பட நான்கு இடங்களில் வெந்நீர் ஊற்றுகள் தோன்றியுள்ளன.

இதனால் அதிர்ச்சியடைந்துள்ள மக்கள், ஊற்றுக்கு மருத்துவ பண்புகள் இருப்பதாக நம்புகின்றனர்.மேலும் சிலர் இந்த ஊற்றில் கடல் உணவை வேக வைத்தும் சாப்பிடுகின்றனர்.

# தொழில்சார் உபகரணங்களைக் கொண்டு சுயபொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்



(கிளிநொச்சி)

மனைப் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் வகையில் 160 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான தொழில் சார் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படும் நிலையில் அவற்றின் ஊடாக துறைசார்ந்தவர்கள் தமது சுயபொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். தொழில்சார் உபகரணங்கள் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் இதை விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வங்கிகள் ஊடான இலகு கடன், உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பு தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற் றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் 'டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்வின் எழுச்சி மனைக்கைத தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொழில்துறை மேம்பாட்டுக்காக புதிதாக உள்வாங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் ஊடாக விளக்கமளிக்கப்படுவதுடன், வழிகாட்டிகளாகவும் இருந்து செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், இதனூடாகவும் இப்பகுதி மக்கள் பாரிய நன்மைகளைப் பெறவுள்ள நிலையில் கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் எவ்வாறு முன்னேற்றம் கண்டு வருகிறதோ அதே போன்று மாவட்ட மக்களது வாழ்வாதாரமும் கட்டியெழுப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் நோக்கம் அதன் செயற்திட்டங்கள் இதனால் மக்கள் அடைந்து வரும் நன்மைகள் தொடர்பான விளக்கவுரையினை அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி நிகழ்த்தினார்.

வாழ்வின் எழுச்சி மனைக் கைத்தொழில் மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடனும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுடனும் மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும். மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துப்பட்ட வாழ்வின் எழுச்சி கண்காட்சியின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளை நிறைவு செய்த ஒருதொகுதியினருக்கு இதன் போது தொழிற்துறை சார்ந்த உபகரணங்களும், பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவ ரத்தினம், பிரதிப்பொலிஸ் மா அதிபர் நீல்தளுவத்த, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மூன்றாவது போட்டியில் இந்திய அணிக்கு இலகு வெற்றி



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரில் நேற்று நடந்த 3 ஆவது போட்டியில் இந்திய அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

ராஞ்சியில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 42.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டை 24 ஓட்டங்களுக்கு இழந்த இங்கிலாந்து, அதன் பின்னர் சிறப்பாக ஆடி ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கெவின் பீற்றர்சன் தவறாக ஆட்டமிழந்ததாக ஆட்டமிழப்பு வ்ழங்கப்பட, அதன் பின்னர் இங்கிலாந்து அணி தடுமாறி விக்கெட்டுக்களை இழந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலா ந்து அணி சார்பாக ஜோ ரூட் 39, ரிம் பிரெஸ்னன் 25, இயன் பெல் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவீந்திர ஜடேஜா 3, இஷாந்த் சர்மா, அஷ்வின் ஆகியோர் தலா 2, புவனேஷ்வர் குமார், ஷமி அஹமட், சுரேஷ் ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 28.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இல க்கை அடைந்தது. முதலாவது விக்கெட்டை 11 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் சிறப்பாக ஆடி வெற் றியைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராத் கோலி ஆட்டமிழக்காமல் 77, கௌதம் கம்பீர் 33, யுவராஜ் சிங் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் ட்ரெட் வெல் 2, ஸ்டீவன் பின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக விராத் கோலி தெரிவானதோடு, 5 போட்டிகள் கொண்ட இத் தொடரில் 3 போட்டிகளில் நிறைவில் இந்திய அணி 2 - 1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வெடிபொருள் மீட்பு

(வடமராட்சி)

மந்திகைப் பகுதியில் வெடிபொருள் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. மந்திகை ஆனைவிழுந்தான் வீதியில் குடிநீர் விநியோகக் குழாய்களை பொருத்தும் பணிகளில் ஈடுபட்ட பணியாளர்களே இந்த வெடி பொருளைக் கண்டு உடனடியாக இராணுவத்தின ருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் வெடி பொருளைச் செயலிழக்கச் செய்தனர். (116)

## இந்தியா...

வேழமாலிகிதனின் நெருங்கிய நண்பர் என்பதும் அவர் கைது செய்யப்பட்ட போது கிளிநொச்சியிலுள்ள சிறிதரனின் அலுவலகத்திலிருந்தே புறப்பட்டிருந்தார் என்ற தகவலும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றன.

இதனடிப்படையில் சிறிதரன் எம்.பி.யின் கிளிநொச்சி அலுவலகத்தை பொலிஸார் சோதனையிட்டபோது அங்கிருந்து அதேரக வெடிமருந்துகளுடன் மேலதிகமாக ஆபாச வீடியோக்கள், புகைப் படங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இவை பொன்.காந்தனின் அலுவலகப்பைகள் மற்றும் அலுமாரிகளிலிருந்து மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்பட்ட போதும் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை பொன்.காந்தனை கைது செய்வதற்கான நீதிமன்ற உத்தரவு பொலிஸாரிடம் இல்லாத நிலையில் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை எடுத்துச்சென்ற பொலிஸார் தேடுதல் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்பித்துள்ளனர். நீதிமன்று பொன்.காந்தனைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது. தன்னை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை அறிந்த பொன்.காந்தன் சுமார் 6 நாட்கள் தலைமறைவாக இருந்து நேற்று இந்தியாவிற்குத் தப்பி ஓட முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமையை அறிந்து கொண்டும் இவருக்கான இந்திய விசா மற்றும் விமான பயணச்சீட்டுக்களை பெறுதல் போன்றவற்றிற்கு யார் உதவி செய்தார்கள் என்பன தொடர்பிலும் குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

## உதவி செய்வதாக...

வாங்கி வைத்திருந்துள்ளார் அருகில் இருந்த பெண்ணொருவர். கைப்பையை யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கி உரிய இளம் பெண்ணிடம் கைப்பையைக் கொடுத்த விட்டு ஆட்டோவில் சாதுரியமாகத் தப்பிச் சென்றுவிட்டார்.

கைப்பையை வாங்கிய இளம் பெண் அதனுள்வைத்த தாலிக் கொடியைக் காணாது தவித்ததுடன், தனக்கு உதவிய பெண் சென்ற ஆட்டோ சாரதியின் உதவியுடன் கொட்டடியில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று உதவி செய்த பெண்ணிடம் தனது தாலிக்கொடி பற்றி விசாரித்த போது அப்பெண்ணும் கைக்குழந்தையும் தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலுக்கு இலக்கான இளம் பெண் யாழ். பொலிஸில் முறையிட்டதையடுத்து பொலிஸாரின் துரித நடவடிக்கையால் உதவுவதாகப் பாசாங்கு செய்த பெண்ணும், அவரது மகளும் கைது செய்யப்பட்டதுடன், ஒன்பது பவுண் நிறையுடைய தாலிக் கொடியும் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் தொடர்புடைய இருவரும் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (25)

## அமெரிக்க...

முக்கியஸ்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் உறுப்பினர் களை சந்திக்கவுள்ள மேற்படி குழுவினர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் முன்னேற்றம் மற்றும் தேசிய செயற்குழுவின் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர் என்று தூதரகம் தெரிவித்தது.

## வாழ்வின்...

பான தெளிவூட்டல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆனால் கலந்துரையாடல்களில் பங்கு பற்றும் பட்டதாரிப் பயிலுநர்கள், அதிகாரிகள் கூறும் விளக்கங்களைச் செவிமடுக்காமல், கலந்துரையாடல் இடம்பெறும் மண்டபத்தில் பின் இருக்கைகளில் ஒன்றுகூடி இருந்து தம்மிடையே பிறிதொரு கலந்துரையாடலை நடத்தி விடுகின்றனர். இதனால் அங்கு என்ன விடயம் கூறப்படுகின்றது என்பது இவர்களின் காதுகளுக்கு எட்டுவதே இல்லை.

அதேபோன்று கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தருமபுரம் பாடசாலையில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்ட இளம் கிராம அலுவலர் ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில் 'கேம்' விளையாடிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

மக்களுடன் பழகும் இவர்கள் இந்தத் திட்டங்கள் தொடர்பாக பூரண விளக்கத்தைப் பெற்றிருந்தாலே அது தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்க முடியும். ஆனால் இவர்களுக்கான செயலமர்வுகளில் இவர்கள் எவ்வித அக்கறையுமின்றிச் செயற்பட்டால் மக்கள் இந்த திட்டம் தொடர்பாக எங்கே விளக்கம் கேட்பது எனவும் பலர் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே, இது தொடர்பாக உரிய தரப்பினர் கூடுதல் கவனமெடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (29)

## இலங்கைக்கான...

கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு அவர், ஆம், இலங்கை செல்லும் திட்டம் உள்ளது என்று பதிலளித்துள்ளார். எனினும், அவர் தனது பயணம் எப்போது இடம்பெறவுள்ளது என்ற தகவலை வெளியிடவில்லை.

## தமிழர்...

கீழ் அது சாத்தியமற்றதாகும். சாதகமான நிலை விரைவில் ஏற்பட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அடுத்த வாரம் அமெரிக்க அரச உயர்மட்டக்குழு ஒன்று கொழும்பு வரவுள்ளது. தற்போதைய இலங்கை நிலைவரத்தை அறிந்து 2013 மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும் என்று நம்புகின்றோம். அமெரிக்காவும் வேறு நாடுகளும் அறிக்கைகளை சமர்ப்பிக்கவிருப் பதாக அறிகின்றோம்.

அமெரிக்கா, இந்தியா மற்றும் அனைத்துலக சமூகமும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியே அரசியல் தீர்வு காணும்படி இலங்கை அரசாங்கத்தை இன்றும் வலியுறுத்தி வருகின்றன. இது விடயத்தில் அனைத்துலக அரசுகள் தெளிவாக இருக்கினறன. இதனை உள்வாங்கும் நிலையில் கொழும்பு அரசாங்கம் இல்லை.

சிங்கள மக்களுக்கு எதிராக நாம் செயற்பட முடியாவிட்டாலும் தமிழ் மக்களின் பிறப்புரிமையை எவரும் பறிக்க விடமுடியாது. அதிகாரம் எம் கைகளுக்கு வரவேண்டும். அதிகாரம் நம் கைகளில் இல்லாதபடியால் நாம் இப்போதும் சமமான மக்களாக வாழமுடியாத நிலையில் உள்ளோம்.

அமெரிக்க அரசாங்கக் குழு கொழும்பு வரவுள்ளது. நாம் தெளிவாக இருக்க வேண்டும். எதிர்வரும் மாதங்களில் தற்போதைய நிலவரங்களில் மாற்றம் ஏற்படலாம் என சம்பந்தன் தெரிவித்தார்.

## கிளிநொச்சி...

சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஆகியோர் இணைந்து தபாலகத்தினைத் திறந்து வைத்தனர்.

இதன்பின்னர் தபால் சேவை யினைச் சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

கடந்த கால யுத்தத்தின் போது முற்றாக அழிவடைந்தி ருந்த இந்தத் தபால் நிலையம் பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 50 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் தலைமைத் தபால் நிலையமும் இதுவாகும்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், வடபிராந்திய தபால் அத்தியட்சகர், பிரதேச தபால் அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# எக்னலிகொட வழக்கில் நியாயம் கிடைக்குமா?

## கேட்கிறார் மனைவி



புதிய தலைமை நீதிபதியாக மொஹான் பீரிஸ் நியமிக்கப் பட்டுள்ள சூழ்நிலையில், காணாமற் போன செய்தியாளர் ஏக்னலிகொட சம்பந்தமான வழக்கு விசாரணைகளில் நியாயம் கிடைக்குமா என்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டுள்ளதாக ஏக்னலிகொடவின் மனைவி சந்தியா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் சந்தியா ஏக்னலிகொட இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற்போன தன் கணவர், வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் பெற்று வாழ்ந்து வருவதாக 2011 இல் ஐ.நா. மன்றத்தின் மனித உரிமை சபையில் மொஹான் பீரிஸ் கூறியிருந்ததை சந்தியா சுட்டிக்காட்டினார்.

ஆனால் 2012ஆம் ஆண்டு ஏக்னலிகொட சம்பந்தமான வழக்கில் நீதிபதி ஒருவர் முன்பு சாட்சியமளிக்கையில், ஏக்னலிகொட இருக்கும் இடம் கடவுளுக்கு மட்டுமே தெரியும் என்று மொஹான் பீரிஸ் கூறியிருந்ததையும் சந்தியா நினைவுகூர்ந்தார்.

இவ்வாறாக தனது கணவன் விடயத்தில் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிய ஒருவர் நாட்டின் தலைமை நீதிபதியாகியிருக்கும் சூழலில், நியாயம் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் கவலை தெரிவித்தார்.

இதேவேளை, மொஹான் பீரிஸ் தலைமை நீதிபதியாக இருக்கும் பட்சத்தில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு நியாயம் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளதாக காணாமற் போனவர் சம்பந்தமாக குரல்கொடுத்து வரும் அமைப்பின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் இந்தச் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய நிலங்கள் அபகரிக்கப் படுவதற்கு எதிராக நீதிமன்றம் சென்று நியாயம் பெறுவதற்கான கதவும் மொஹான் பீரிஸ் தலைமை நீதிபதியாகியுள்ள நிலையில் அடைபட்டுவிடும் என்று தான் கருவதாக மகேந்திரன் தெரிவித்தார்.

காணாமற்போனவர்கள், அரசியல் கைதிகள் ஆகியோர் தொடர்பாகவும் நியாயம் கிடைக்காமல் போகும் வாய்ப்புள்ளது என்றும் சுந்தரம் மகேந்திரன் குறிப்பிட்டார்.

மொஹான் பீரிஸ் சட்ட மா அதிபராக இருந்த காலகட்டத்தில் இவ்வாறான வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

# ஆஸி செல்ல முற்பட்ட ஒன்பது பேர் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு செல்ல முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 9 இளைஞர்கள் திருகோணமலை பொலிஸாரல் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற அனாமதேய தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து திருகோணமலை சில்வர் ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள் அங்கிருந்து கொழும்பு சென்று கொழும்பிலிருந்து திருகோணமலையை நோக்கி வந்திருந்தனர். இவர்களது பயணம் சந்தேகத்தை ஏற்படுத்தியதன் ஒரு காரணமாக மேலதிக விசாரணைக்காக பொலிஸார் இவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

# இந்தியாவிலிருந்து மரக்கறிகளை இறக்குமதி செய்ய ஆலோசனை

(கொழும்பு)

மரக்கறிகளின் விலை என்றுமில்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதை அடுத்து, இந்தியாவில் இருந்து அவற்றை இறக்குமதி செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கடுமையான வறட்சி மற்றும் பருவகால வெள்ளத்தை அடுத்து மரக்கறிகளின் விலை கடுமையாக அதிகரித்துள்ளன.

இந்தநிலையில், மரக்கறிகளின் விலையைக் குறைக்க இந்தியாவில் இருந்து மரக்கறிகளை இறக்குமதி செய்யுமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை நம்பமுடியாத அளவுக்கு உயரக்கூடும் என்று தம்புள்ள பொருளாதார நிலையத்தின் வர்த்தகர் சங்கத் தலைவர் எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, உள்ளூர் மரக்கறிகளின் உற்பத்தி சந்தைக்கு வரும் வரையில், இந்தியாவில் இருந்து அவற்றை இறக்குமதி செய்வதன் மூலமே மரக்கறியின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பு, இலங்கையில் ஊட்டச்சத்து மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

அதேவேளை, வெள்ளத்தினால் அழிவுகளைச் சந்தித்த விவசாயிகள் இந்த விலை அதிகரிப்பினால் தமது இழப்புகளை ஓரளவுக்கு ஈடுசெய்ய முடியும் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

# 21 இலங்கை மீனவர்கள் இந்திய கடலில் கைது

இலங்கை மீனவர்கள் 21 பேர் இந்திய கரையோர பாதுகாப்பு படைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மீனவர்கள் பயணித்த படகுகள் ஏனைய மீன்பிடி உபகரணங்களை இந்திய பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தின் கிருஷ்ணப்பட்டினம் பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட குறித்த இலங்கை மீனவர்கள் தற்போது புழல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்து பத்திரிகை செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மற்றொருவருக்கும் கொலை மிரட்டல்

மன்னாரில் மற்றுமொரு ஊடகவியலளாருக்கு சியாத் இயக்கம் என்ற பெயரில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஏ.எஸ். எம்.பஸ்மி என்பவருக்கே கடந்த வியாழன் இவ்வாறு கொலை மிரட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த வருடம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் நின்று செய்திகளை சேகரித்த மன்னார் மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர்கள் மூவருக்கு கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் சியாத் இயக்கம் என்ற பெயரில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மேற்படி ஊடகவியலாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இந் நிலையிலே மேற்படி பஸ்மி என்பவருக்கும் கொலை மிரட்டல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# கொடிகாமத்தில் விபத்து; கோயிலாமனை வாசி பலி



(யாழ்ப்பாணம்)


ஏ-9 வீதியில் கொடிகாமம் ரயில் நிலையப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மோட்டார் சைக்கிள் மீது சிறியரக கன்ரர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கொடிகாமத்தில் இருந்து எம்டி - 90 மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த கோயிலாமனையைச் சேர்ந்த கனகசுந்தரம் ஜீவராசா (வயது - 60) என்பவரை அதே திசையில் இருந்து பின்புறமாக தேங்காய் ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருந்த சிறிய ரக கன்ரர் வாகனம் பின்புறமாக மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அந்த இடத்திலேயே பலியானார்.

இதனையடுத்து கன்ரர் வாகனத்தை ஓட்டி வந்தவர். அங்கிருந்து ஓடித்தப்பி கொடி காமம் பொலிஸில் சரணடைந்துள்ளார். இதனையடுத்து கொடிகாமம் பொலிஸாரினால் இறந்தவரது உடல் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (பா,130)

# அரசியல் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சி

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு



இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த அமெரிக்காவும் பிரிட்டனும் முயற்சித்து வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் நாடாளுமன்றத்துக்கும், நீதிமன்றத்திற்கும் இடையேயான மோதலுக்குப் பின்னால் அமெரிக்காவும், பிரித்தானியாவுமே செயற்பட்டன.

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அரசியலமைப்பு திருத்தத்தின் போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும். இந்திய மற்றும் அமெரிக்க உறவுகளை கைவிட்டு சீனா, பாகிஸ் தானுடனான உறவுகளை அரசு வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். அதனைச் செய்யாவிட்டால் பிரிவினைவாத நிழல்கள் இலங்கையை பின்தொடர்ந்து கொண்டேயிருக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கண்காட்சியில் கைவரிசை 5 சைக்கிள்கள் 1 பல்சர் திருட்டு

(யாழப்பாணம்)

சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நடைபெறும் துரையப்பா விளையாட்டரங்கு சூழலில் மோட்டார் சைக்கிள், சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இக்கண்காட்சி இன்று நிறைவடைகின்றது. இக்கண்காட்சியைக் காண ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுகின்றனர். நேற்று வரை இவ்வாறு கண்காட்சியைக் காண வந்தவர்களின் 5 சைக்கிள்களும் ஒரு பல்சர் ரக மோட்டார் சைக்கிளும் திருடப்பட்டுள்ளதாக நேற்று யாழ். பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இஸட் புள்ளிகளை கணிக்க 3 பேராசிரியர்கள் நியமனம்

2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் இஸட் புள்ளிகளை கணிக்கும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பத்தில் பாண்டித்தியம்மிக்க பேராசிரியர்கள் மூவரை நியமித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் தெரிவு செய்யப்பட பேராசிரியர்கள் மூவரே இதற்கென நியமிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலையின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிடத் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தாகம் தீர்த்த பெண்ணுக்கு கைவரிசை காட்டிய நபர்

குடிதண்ணீர் கேட்டுவந்த நபர் ஒருவரினால் குளித்துக்கொண்டிருந்த இளம்பெண்ணின் சங்கிலி அறுத்த சம்பவம் ஒன்று நேற்று கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

கோவில் வீதியிலுள்ள தனது வீட்டில் இளம் பெண்ணொருவர் குளித்துக்கொண்டிருந்த சமயத்தில் வழிப்போக்கராக வந்த ஒரு நபர் வீட்டுக் கதவைத் தட்டி குடிக்க தண்ணீர் கேட்டுள்ளார். குறித்த பெண்ணும் நபருக்கு குடிக்க தண்ணீர் கொடுக்கச் சென்ற சமயம் பார்த்து லாவகமாக அவரது சங்கிலியை அறுத்துக்கொண்டு அந்நபர் மாயமாக ஓடிமறைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.